161 to 185

டாக்டர் பிலோ. இருதயநாத்

161/91

கேரள ஆதிவாசிகள்



Y567.212
N81
165644

வானதி பதிப்பகம்

வானதி
முதற் பதிப்பு : செப்டம்பர் 1989

திருநாவுக்கரசு தயாரிப்பு

165644
சென்னை-600 002.

விலை: ரூ. 8-00

Y567.212
N89

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600 014

ARCHBISHOP'S HOUSE,
Santhome, Madras—4.
23rd March, 1970.

TO WHOM IT MAY CONCERN

Mr. Philo Iruthayanath is one of those rare men who are prepared to do anything and undergo any difficulty or inconvenience to achieve the object proposed for realization. He took it upon himself to study the life and history of the many tribal people who are still found in India. For this he has had to travel to far, out of the way areas, live with the people for days together, experience many inconveniences and even dangers.

The many interesting facts he has gathered and brought out in attractive publications are a real contribution to the history of our country. One may perhaps look down upon the tribal life as primitive, barbarous and uncivilized, but a perusal of these books will show that in their poverty and primitive life these people have many traits of character and life which may, at times, put to shame the so-called modern civilization. His books certainly make very interesting reading and are bound to contribute towards a greater appreciation of our country. I wish therefore that these rather original publications find a place in all the libraries of our country and the Government may recognise his work and further promote his research capacity.

I wish God's blessing on the tireless work of Mr. Philo Iruthayanath.

(Sd.) R. ARULAPPA
Archbishop of Madras & Mylapore,
South India.

True copy from 'Catholic'
THE NEW LEADER—Dated: 17-1-1971 and
THE HERALD from Calcutta—Dated: 8-1-1971

CATHOLIC ADVENTUROUS ANTHROPOLOGIST

Mr. Philo Iruthayanath had already won a TAMIL NADU STATE AWARD. (I received the National Award also on 28-4-75 at New Delhi)

Born of Tamil parents in Mysore in 1916, Mr PHILO IRUTHAYANATH was educated at SAN THOME HIGH SCHOOL, Madras and later did his Teacher's Training. He has been a research worker in an thropology for over THREE DECADES, while working as a City School teacher for 25 YEARS

He has travelled all over India ON A CYCLE on which he has made simple mechanical arrangements to enable him TO SLEEP on it in the nights when he is on the road.

During his extensive travels over hill, and through jungle and city, he made a special study of the many tribes of India, from Tibet in the north to the Nilgris in the South.

He has published more than 5000 ARTICLES in English and Tamil in 67 magazines on the different tribal races in the country. He is the author of 29 BOOKS on anthropology, in Tamil, dealing with the tribals, their customs, traditions, manners and culture.

MANY FOREIGN VISITORS to Madras, interested in anthropology have called at his residence and have held discussions with him about his researches and experience and sought his advice in regard to their own researches.

Mr. philo Iruthayanath has a unique collection of specimens of anthropological interest.

(Same Subject published in 'Madras Mail' 25-10-1970)

அணிந்துரை

"ஆதிவாசிகளின் இதயவாசி"

திரு. பிலோ இருதயநாத் என்ற எழுத்தாளர் மானிட இயல் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிவரும் கட்டுரைகளை மிகவும் ஆர்வத்துடன் படிப்பவன் நான். அவருடைய பெயர் எனக்குப் பழக்கமானதாக இருந்தாலும், அவரை நான் நேரில் பார்த்ததில்லை. சில நாட்களுக்கு முன் 'ஹிந்து' பத்திரிகையில் வெளியாகியிருந்த அவரது ஆங்கிலக் கட்டுரை ஒன்றைப் படித்ததும், அதைக் கத்தரித்து எடுத்து வைத்துக் கொண்டேன். காரணம், என் ஆவலைத் தூண்டி அறிவூட்டும் பல அரிய விஷயங்கள் அதில் இருந்ததுதான்.

வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருப்பேன்; வீதியிலே சைக்கிளில் பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் அடிக்கடி போவார்; விநயமாக எனக்கு வணக்கம் தெரிவிப்பார்; என் வீட்டுக்கு மிக அண்மையில் வசிப்பவர் இவர்—ஒருநாள் என் வீட்டுக்கு வந்திருந்தார்; தமிழிலும் ஆங்கிலத்திலும் திரு. இருதயநாத் எழுதியிருக்கும் கட்டுரைகளையெல்லாம் கத்தரித்துத் தொகுத்து வைத்திருந்தார்: அவற்றை என்னிடம் காட்டினார். 'மானிட இயல், மொழி இயல் பற்றி ஆராயும் இருதயநாத்திடம் நம்மைப்போலவே இவரும் ஈடுபாடுள்ளவர் போல் இருக்கிறது' என்றுதான் எண்ணினேன். "இந்தக் கட்டுரைகள் உண்மையிலேயே நன்றாகத்தான் இருக்கின்றன" என்றேன். ஆனால், இதென்ன! இந்தப்

'பள்ளியாசிரியர்', தாம் இன்னாரென்று தெரிவித்ததும் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் வியப்பையும் சொல்லி முடியாது. மிகவும் பிரபலமான ஆராய்ச்சியாளர் பிலோ இருதயநாத் இவரேதான் என்று தெரிந்துகொண்டேன்.

ஆனால் அந்த மகிழ்ச்சியிலும் ஒரு விஷயம்; எனக்கே என்னைப்பற்றி எண்ணும்போது தலையிறக்கமாக இருந்தது. பலபேர் எழுதுவதை ஆவலுடன் படிப்பவன் நான்; அதிலும், பலவகை மக்களைப் பற்றியும், அவர்களுடைய இன வரலாறு, சமூக அமைப்பு, பழைய ஐதிகம், மொழி இவை பற்றியும் வெளியாகும் விஷயங்களென்றால், எனக்கு மிகவும் பிடிக்கும்; அப்படி இருந்தும், நான் என் வீட்டருகில் வாழும் இந்த ஏழைப் பள்ளியாசிரியர்தான் இத்தகைய பிரபல ஆராய்ச்சியாளர் என்று சற்றும் எண்ணிப் பார்க்கவில்லை! பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவன் நான்; முக்கியமாக, பல்கலைக்கழகப் பேராசிரியர்களோடுதான் பழகி வருகிறேன். இந்த நிலையில், தொடக்கப் பள்ளியாசிரியர் ஒருவர் இத்தகைய அருமையான விஷயங்களைக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டு, ஏராளமான தொகை செலவழித்துச் செய்கிற அருமுயற்சியல்லவா இது! இதற்கென்றே அதிகப் பொருட் செலவில் திட்டமிட்டு நடத்துவதாகச் சொல்லும் நிறுவனங்கள்கூட இத்தகைய அற்புதத்தைச் சாதித்திருக்க முடியுமா என்ற நிலையில், பிலோ இருதயநாத்தைப் போன்ற தனிமனிதர் தம் சொந்த முயற்சியினால் இதைச் சாதித்து அரிய விஷயங்களைக் கண்டறிந்திருக்கிறார் என்றால், இதை என்ன என்பது?

இப்படி ஓர் அநுபவம் ஏற்பட்டதிலிருந்து, நம் நாட்டில் வாழ்வின் பல துறைகளில் காணும் அடிப்படையான—தெளிவான—ஓர் உண்மை புலனாகிறது. தம் முயற்சிகளையெல் லாம் நன்கு பயன்படுத்தி, மொத்தத்தில் உலகத்துக்கு நன்மை பயக்கக் கூடியபடி உண்மையாகவே திறமையுடன் பாடுபடு

வோருக்கு அத்தகைய நல்ல வசதியும் வாய்ப்பும் கிட்டுவது அரிதாயிருக்கிறது. தக்க சமயத்தில், தக்கபடி ஊக்கம் அளிக்காததால் இப்படிப் பல 'ராமாநுஜ'ங்களை நாம் இழக்க நேர்ந்தது. இது நம் நாட்டில் காணும் நிலை— வருந்துவதற்குரிய நிலை!

தமிழ் வாசகர்களுக்குப் பிலோ இருதயநாத்தை அறிமுகப்படுத்தவே தேவையில்லை. கணக்கற்ற கட்டுரை களைப் பல; பத்திரிகைகளில் வெளியிட்டுப் புகழ் ஈட்டியவர் இவர். அவற்றில் சில, புத்தக உருவிலும் வெளியாகியிருக் கின்றன. ஆனால் இந்த ஆராய்ச்சி நிபுணரை அநேகம் தமிழ் எழுத்தாளர் என்னைப்போலவேதான் நேரில் கண்டு பழகிய தில்லை என்று தெரிகிறது! நான் அண்டை வீட்டில் இருப் பவர்; ஓர் எழுத்தாளர்; புத்தகப் பிரியர். நான்கூடப் பிலோ இருதயநாத் என்பவர் ஒரு பள்ளியாசிரியர் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் பாருங்களேன்! அன்றொரு நாள், எனக்குத் தெரிந்த தமிழ் எழுத்தாள நண்பர்களை, ''இவரைப் பற்றித் தெரியுமா உங்களுக்கு?'' என்று விசாரித்தேன். ''ஓ! தெரியுமே!'' என்றுதான் சொன் னார்கள். ஆமாம்; இவருடைய கட்டுரைகளை அவர்கள் படித்து அதன் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; ஆனால் நேரில் பார்த்ததில்லையாம்! ஏன் தெயுரிமா? இவர் மிகவும் அடக்க வொடுக்கமாக இருந்து வரும் எழுத்தாளர்— ஆராய்ச்சியாளர். இன்ன இன்ன பொருள் எங்கெங்கே கிடைக்கும் என்பதை நேரில் போய்க் கண்டு சேகரித்து வருகிறார்; இதற்காக எவ்வளவு பாடுபடுகிறார்! சொல் லொணாத கஷ்டங்களை ஏற்று அநுபவித்தாலும், இத்தகைய விஷயம் பற்றி எழுதுவதிலேயே இன்பம் காண்கிறார்; அது ஒன்றே இவருக்குப் போதும்; வேறொன்றையும் விரும்புவ தில்லை. சென்னை நகரின் நடுவே வாழ்கிறார். ஆனாலும், தொடர்ந்து ஒரு வாரத்துக்குமேல் இங்கேயே தங்குவ தில்லை. சட்டென்று ஒருநாள் எங்கோ புறப்பட்டுப் போய் விடுகிறார். இரண்டு அல்லது நாலு வாரங் கழித்துத் திரும்பி

வருகிறார். அப்போதெல்லாம் மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலின் உச்சிப் பாகத்தில் பழங்குடி மக்களோடு வாழ்கிறார். அங்கே கிடைக்கும் உணவைக்கொண்டே சில சமயம் காலங் கழிக்கிறார்; பலசமயம் தாம் கொண்டு போகும் சிறு அளவு உணவை உண்டு அதோடு திருப்தி அடைகிறார்; அப்படி ஒன்றும் இல்லையா, முழுப்பட்டினியும் கிடக்கிறார். இந்தப் பட்டணத்தில் வாழ்ந்தாலும் இவர் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதில்லை. தம் ஆராய்ச்சி அறையில் உள்ள அச்சிட்ட நூல்களை வைத்துக்கொண்டு இருந்துவிடுபவ ரல்ல இவர்; வெளியே எங்கும், மக்கள் வடிவிலும், அவர் களது வாழ்விலும் காணும் பல அரிய விஷயங்கள்தான் இவருடைய ஆராய்ச்சிக்கு இன்றியமையாதவை மிகவும் அரிதாயிருக்கும் ஒன்றை நுணுக ஆராய்வதில் தனித்திறன் படைத்தவர் இவர்; யாரோ பழங்குடி மகன் ஒருவன் பேசும் போது, தாம் கேட்ட ஒரு சொல்லைப் பற்றியே நாட் கணக்கில் எண்ணமிட்டுக் கொண்டிருப்பார் இவர்; நல்ல மொழி இயல் நிபுணர் ஒருவர், எப்படி ஆராய்ந்தறிய வேண்டுமோ அப்படியேதான் இவரும் மிக அரும்பாடுபட்டு அந்தச் சொல்லைப் பற்றிய வரலாற்றைக் கண்டறிவார். எவரோ பழங்குடி மக்களிடையே தனிப்பட்டதாகத் தோன்றும் சமூகப் பழக்கம் பற்றி ஆராய எங்கெங்கோ உள்ள நாட்டுப்புற மக்களையெல்லாம் காணப்போகிறார். இன்ன பழக்கம், குறிப்பிட்ட அந்தப் பழங்குடிகளுக்கே உரியதா, வேறு பல மக்களிடையேயும் இப்படி ஒரு பழக்கம் இருந்து வருகிறதா என்று கண்டறிவார். அப்போதுதான் இவருக்கு நிம்மதி ஏற்படும்; அதுவரையில் சும்மா இருக்க மாட்டார். உண்மையான ஆராய்ச்சியாளர் கடைப்பிடிக்க வேண்டிய ஒரே வழி இதுதான்; இதில் சந்தேகமேயில்லை.

இந்த நூலில் வெளியாகியிருக்கும் கட்டுரைகளைப் படிக்கும்போது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியும் ஆவலும் மூண்டன. இதில் ஒரு சொல் விடாமல் படித்தேன். ஏதோ பிரமாதமாகப் படித்த அறிவாளி நான், பிறர் குற்றங் காண

வேண்டும் என்ற ரீதியில் இதைப் படிக்கவில்லை. புதுமையான பல விஷயங்களை அறிந்து அறிவை வளர்த்துக் கொள்ள விழையும் மாணவன் என்ற முறையில்தான் படித்தேன். தாம் சேகரித்த பல அரிய விஷயங்களை எடுத்து இவர் விளக்கும் முறை என்னைப் பெரிதும கவர்ந்தது. இவரோடு கூடவே நானும் அந்த உயர்ந்த மலைச் சாரல்களில் பிரயாணம் செய்வதுபோலவும், இவர் நேரில் கண்ட பழங்குடி மக்களோடு நானும் வாழ்வது போலவுமே எனக்குப் பட்டது. ஏன், இந்தக் கட்டுரைகளைப் படித்து, உண்மையிலேயே பெரும் பயன் அடைந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

நம் நாட்டு மலைவாசிகளைப் பற்றி ஆராய்வது இன்னும் ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது. இந்தத் துறையில் ஏதோ சில முயற்சிகள் அவ்வப்போது நடந்திருக்கின்றன. காலஞ் சென்ற அனந்த கிருஷ்ணையர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் சில காலம் மானிட இயல் துறையினர் தலைவராயிருந்த அவருடைய புதல்வர் எல்.ஏ. கிருஷ்ணையர் போன்றவர்களின் முயற்சியைத்தான் குறிப்பிடுகிறேன். திரு பிலோ இருதயநாத், இதனை ஆராயும் முறைக்கும், அவர்கள் ஆராய்ந்திருப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பழங்குடிகளின் பழக்கம், நடையுடை பாவனைகளைக் குறிப்பிடும் போது இந்த நூலின் ஆசிரியரான திரு. பிலோ இருதயநாத் பழங்குடிகளின் உள்ளத்தில் இருப்பதை ஆழ்ந்தறிகிறார். பழங்குடிப் பெண் ஒருத்தி மேலாடை போட்டுக் கொள்ள விரும்புவதில்லை என்று வைத்துக்கொள்வோம்; அதனால் அவளுடைய கற்பு ஒன்றும் குலைந்துவிடாது என்பது இந்தப் பழக்கத்திலிருந்து தெரிகிறது. ஏன், இன்னும் கேட்கப் போனால், தற்காலத்து ஆடை அணிகளைப் பூண்டு, பாவ எண்ணம் உடையவர்களைத் தம்பால் ஈர்க்கும் நவநாகரிக நங்கையரைவிட இந்தப் பழங்குடிப் பெண்ணுக்கு அவர்களது சமூகத்தில் பெருமதிப்பு உண்டு; அவள் நிர்ப்பயமாயும் நல்ல மனவுறுதியுடனும் நேர்மையுடனும் விளங்குகிறாள்.

இது சம்பந்தமாகக் கேரளத்தில் இருந்து வந்த ஒரு வழக்கத்தை இங்கே குறிப்பிட வேண்டும். அங்கே நாயர்குலப் பெண்களும் இப்படித்தான் மேலாடையின்றிச் சமீபகாலம் வரையில் இருந்து வந்தார்கள்; ஏன் அங்கே உள்ள கிராமாந் தரங்களில் இன்னுங்கூட இந்தப் பழக்கத்தைக் காணலாம். ''நாயர்குலப் பெண்ணின் மார்புக்கு மறையில்லை; நாயர்குல வீரனது வாளுக்கு உறையில்லை'' என்பது அங்கே பொது வாக வழங்கும் பழமொழி. அதன் பொருள்: இப்படி அறை குறையாக உடுத்த நிலையிலும் அவளை எவனும் பார்க்கத் துணியமாட்டான்; அப்படிப் பார்த்தானோ, (நாயர்குல ஆண் மகனின் வாளுக்கு இரையாகி) அவன் தன் உயிரையே இழக்க வேண்டியதுதான்! பழங்குடி மக்களைப்பற்றி ஆராயா மல் பட்டணத்தில் வாழும் நம் நவநாகரிகச் சமூகத்தை ஆராய்வதென்பது அரைகுறை ஆராய்ச்சி என்றுதான் சொல்ல வேண்டும். தற்கால மனித சமூகத்தின் பழக்கவழக் கங்கள் எப்படி ஏற்பட்டன என்பதைப் பழங்குடி மக்களின் வாழ்வு முறையிலிருந்து கண்டுகொள்ளலாம். ஓர் உதாரணம் —ஏதோ ஒன்றுதான் என்றாலும், முக்கியமான ஒரு விஷயத்தை இது விளக்குகிறது; நன்கு வளர்த்துப் பண்படுத்தியிருக்கும் நம் மொழிகளைப் பற்றி இன்று ஆராய் கிறோமே, மலைவாசிகள் பேச்சு வழக்கிலிருந்து இதுபற்றி ரசமான எத்தனையோ விஷயங்களைத் தெரிந்துகொள்ள லாம். இந்த வெளியீட்டின் மிகவும் சுவையான—அறிவூட்டும் வகையில் அமைந்த—அம்சம், தமிழ்நாட்டுக்கும் கேரளத் துக்குமுள்ள அடிப்படை ஒற்றுமையைக் காண விழையும் நம் முயற்சிகளுக்கு உறுதுணையான பல உண்மைத் தகவல்கள் இதில் தரப்பட்டிருப்பதுதான். இந்த இரு நாட்டினரும் பண்பாடு, மொழி, சமயம் முதலிய துறைகளிலெல்லாம் ஓரினத்தவரே என்பது ஐயமறக் கண்ட உண்மையாகும். சிலப்பதிகாரம், புறநானூறு, தொல்காப்பியம், இன்னும் இவைபோன்ற பழைய நூல்களில் இதற்குரிய இலக்கியச் சான்றுகளை மிகுதியாகக் காணலாம். ஆயினும், அந்தப் பழைய நூல்களில் குறிப்பிட்டு, நம் ஆராய்ச்சிக்கு அடிப்

படையாக அமைந்தவற்றுக்கு உறுதி பயக்கும் முறையில் பல விஷயங்களைப் பிலோ இருதயநாத் இதோ இந்த நூலின் வாயிலாகத் தந்திருக்கிறார்.

இந்த நூலாசிரியர் பல அரிய விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். மொழி இயல், மானிட இயல் வரலாறு இவற்றில் ஈடுபாடுள்ளவர்கள் இவருக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்லுவேன்: இந்நூலாசிரியரின் முயற்சியை அரசாங்கமும் அக்கதெமியும் தக்கபடி ஊக்கி ஆதரிக்க வேண்டும். 'ஆசிரியர் காலமான பின் மிகவும் ஆர்வத்துடன் பலர் கூடி அவருக்குச் சிலையோ நினைவுச் சின்னமோ எழுப்புவோம்' என்று காத்திருக்க வேண்டியதில்லை!—இப்படித்தானே நம் நாட்டில் அடிக்கடி நடக்கிறது? இது நல்லதன்று. உண்மையிலேயே தகுதிபெற்ற நூலாசிரியர்களை அவர்களது வாழ்நாளிலேயே கௌரவிக்கப் போகும் நன்னாள் என்றுதான் தோன்றுமோ?

டாக்டர் எஸ். கே. நாயர்
M.A., M.O.L.Ph D
மலையாள மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்

கேரள ஆதிவாசிகளைக் கண்ட விதம்

இங்கே உள்ள ஒவ்வொரு கட்டுரையிலும், அந்த அந்த இடத்து மக்களின் முன்னாள் பழக்கவழக்கங்களும் சூழ்நிலைகளும் அப்படியே எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றன. இவை வெறும் கதைகள் அல்ல; சமுதாய வளர்ச்சியையும் வரலாற்றையும் நிர்ணயித்துக் கதைபோல் எழுதிய வரலாறுகளே.

வரலாற்றைப் படிப்பதால் ஏற்படும் சலிப்பும், தத்துவத்தைக் கற்பதால் ஏற்படும் சிரமமும் இந்த நூலில் தோன்றமாட்டா.

தும்பிகள் பூக்கள் தோறும் பறந்து சென்று தேனைச் சேகரித்து வைத்தால் அதைக் காடர்கள் கொண்டுவந்து எடுத்துக் குடித்து மகிழ்வதுபோல, நானும் பல காடுகளுக்குச் சென்று, பசி, தாகம் பாராமலும், காட்டுவாழ் மக்களோடு கூழ் குடித்தும், அதனால் சில பொழுது எனக்கு நேர்ந்த வயிற்றுளைச்சலையும் பொருட்படுத்தாமல், ஊர் ஊராகச் சுற்றிப் பலவகை மக்களிடமிருந்து பல வியக்கத்தக்கப் பழக்க வழக்கங்களும் சிறந்த பண்புகளும் பற்றிய தகவல்களாகிய தேனைச் சேகரித்துக் கொண்டுவந்து நிறைத்த பல கட்டுரைகள்தாம் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் (தமிழ்நாடு உட்படத்தான்) பழங்காலம் முதல், முறையான, தொடர்ச்சியான வரலாறு எழுதும் பழக்கம் இருந்ததில்லை. ஆங்கிலேயர்களின் தொடர்பு ஏற்பட்ட பின்னரே, இந்த வகையில் வரலாறு எழுதும் பழக்கம் தோன்றியது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான்

வேண்டும். நமது நாட்டை அரசாண்ட ஆங்கிலேயர், நம் நாட்டு மக்களின் வரலாற்றை அறிய விரும்பினார்கள். அதற்குத் தக்க வரலாற்று நூல்கள் இல்லாமையை அறிந்தார்கள். வரலாற்றுச் செய்திகளைச் சிறிதளவு கொண்டுள்ள கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் பல இடங்களில் சிதறிக் கிடந்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்தக் காலத்தில் ஆங்கில அரசினரும் பல பாதிரிமார்களும், நவீன நாகரிகம் அறியாமல் மலையில் மறைந்து வாழும் மக்கள் சிலரின் சமூகத்தை ஆராய்ந்ததுடன், அவர்களிடம் சீர் திருத்தம் செய்யப் புகுந்தார்கள். அங்ஙனம் புகுந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த, புரிந்த தாங்கள் தெரிந்துகொண்ட சில செய்திகளை விவரித்து ஓரளவுக்கு ஆங்கிலத்தில் எழுதினார்கள். ஆனால் அவர்கள் எழுதியவை சங்ககால நூல்களையும் காடர்களின் மொழிகளையும் தெரிந்துகொண்டு எழுதியவை அல்ல. ஆனால் அவ்வளவாவது செய்தார்களே என்று நாம் நன்றி பாராட்டத்தான் வேண்டும்.

இந்தப் பழங்குடி மக்களுக்கென்று சமூக சேவை செய்ய முன்வந்த மக்களும், சங்கங்களும் அன்று இல்லை. போதாக் குறைக்குக் காட்டில் வாழும் பழங்குடிகளில் சில பிரிவினர்களைக், 'குற்றப் பரம்பரையினர்' (Criminal Tribes) என்று வேறு பெயரிட்டுப் பிரித்து வைத்திருந்தார்கள். 1947ஆம் ஆண்டில் பாரதம் விடுதலை அடைந்த பின் இந்தச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் நான் இந்தியக் காடு சுற்றி, அவற்றில் வாழும் பழங்குடிகளிடமும் பிற மக்களிடமும் பழகி, காட்டைவிட்டு வீட்டை அடைந்ததும் அவர்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து பழங்காலத்து நூல்களையும், பிற நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு' பல குறிப்புக்களையும் துருவித் துருவிச் சான்றுகள் கண்டு, அந்தந்தப் பழங்குடிகளின் கருத்துக்கு மாறுபடாமல், என் வாழ்க்கைப் போராட்டத்தினிடையே கிடைத்த சிறிதளவு நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு எழுதிய கட்டுரைகளே இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

நான் ''மானிட இயல் துறை'' பயின்றவன் அல்லன். பட்டம் பெற்றவனும் அல்லன். ஆயினும் பழைய காட்டு மக்களைப் பற்றியும் பழங்குடிகளைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தால் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னமே, சில காடுகளுக்குச் செல்லத் தொடங்கினேன். பஸ் வசதியும் வண்டி வசதியும் இன்று இருப்பது போல், அன்று இல்லை. நடந்தும் வைக்கோல் ஏற்றிச் செல்லும் லாரியிலும் மாட்டுவண்டியிலும் ஏறிச் சென்றேன்.

காடுகளுக்குச் சென்று நான் கண்டுவந்த செய்திகளை விவரித்துக் கட்டுரைகளாக எழுதிப் பல புகைப்படங்களுடன் பல செய்தி இதழ்களுக்கு உதவிப் பதிப்பிக்க வேண்டிக் கொண்டேன். பழங்குடிகளிடம் பழகி நான் அடைந்த பலன்கள் ஏட்டில் அடங்கமாட்டா.

ஓரளவுக்குப் பொதுமக்கள் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்துடன் ஒவ்வோர் இனத்தாரைப் பற்றியும் வரலாற்றுச் சான்றுகள் கொடுத்து, எம்மதத்தினருக்கும், எவ்வினத்தினருக்கும் மனம் புண்படாத வண்ணம் நடுநிலையோடு எழுத விரும்பினேன். எனவே இயன்ற வரையில் ஒவ்வோர் இடத்துக்கும் பிரயாணம் செய்து ஒரு முறைக்கு ஒன்பது முறை அந்த மக்களைக் கேட்டுச் சந்தேகங்களை நீக்கிக்கொண்ட பின்னரே, சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதிய கட்டுரைகள் இவை.

சில இடங்களில் ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறேன். அதைக் கூறியது கூறல் என்னும் குற்றமாகக் கொள்ளாமல், தனித்தனியாகக் காடர்களைப் பற்றித் தெளிவுபடுத்தும் பொருட்டுக் கூறியதாகக் கொள்ள வேண்டுகிறேன்.

உலகத்தில் மொழியில்லையானால் நாகரிகமே தோன்றியிருக்காது. ஆகையால் காடர்களின் நாகரிகத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அறிய வேண்டி அவர்களுடைய

மொழிகளைப் பற்றியும் ஏதோ சிறிது தெரிந்துகொண்டேன். அவர்களுடைய உணவுகளை உண்டு பழகிக்கொண்டேன். காட்டில் வாழும் மக்களிடையே வழங்கும் மொழிகள் எப்படித் தோன்றின என்று அறிய நானும் அவற்றுள் சில மொழிகளைக் கற்றும் எழுதியும் வந்துள்ளேன். அவற்றில் சில மொழிகளை மட்டும் பல கட்டுரைகளில் சேர்த்திருக்கிறேன்.

மேலும், மேலும் எனக்கு ஆராய்ச்சித் துறையில் ஊக்கமளித்த உயர்திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களுக்கும், உயர்திரு. சாண்டில்யன் அவர்களுக்கும், நான் சோர்வடையும்போதெல்லாம் எனக்கு ஊக்கமூட்டி, உற்சாகமளித்த விவேகாநந்தா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் உயர்திரு. ஜெகந்நாதாச்சாரி அவர்களுக்கும், உயர்திரு. இராமன் அவர்களுக்கும், 'கேரள நாட்டு ஆதிவாசிகள்' என்ற இந்நூலைக் கண்ணுங் கருத்துமாக வாசித்து என்னைப் பாராட்டி மதிப்புரை ஈந்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் கேரள மொழிப் பேராசிரியராகப் பணியாற்றும் உயர்திரு. எஸ். கே. நாயர் அவர்களுக்கும், என் உயிர் நண்பர் உயர்திரு. விவேகாநந்தம் அவர்களுக்கும், இந்நூலுக்கு வேண்டிய குறிப்புகள் சேகரிக்க எனக்கு உதவியாக இருந்த நண்பர் உயர்திரு. ஒடியாத்து பொ. இராமன் குட்டி —நென்மாறா— அவர்களுக்கும், என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், இனிமேலும் எனக்கு ஊக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெ 2, செயின்ட் லாசர்
கோயில் தெரு
மந்தவெளி, சென்னை—28.

பிலோ இருதயநாத்

பொருளடக்கம்

1.	செருமர்கள்	17
2.	மலைப் பணிக்கன்மார்	31
3.	வயநாடன் செட்டியார்	43
4.	வேட்டையாடும் நாயாடிகள்	57
5.	கேரள நாட்டு மலையாளிகள்	62
6.	மலையாள மொழியில் பிறமொழிச் சொற்கள்	64
7.	மலையாள சொற்கள் 'தெலுங்கு மொழியில்' கொடுக்கும் பொருள்கள்	68
8.	மலையாளக் கிழமைகளும் மாதங்களும்	69
9.	ஆதிவாசிகளின் பாடல்கள்	71
10.	கேரள நாடோடிப் பாடல்	78
11.	ஆதிவாசிகளின் பழமொழிகள்	80
12.	பழைய ஊர்களும் பூகோளச் செய்திகளும்	90
13.	வெளிநாட்டில் மலையாள நூலகங்கள்	92
14.	கேரளம் சில குறிப்புகள்	93
	முக்கிய மாவட்டங்கள் நகரங்கள்	94
	பெரிய நகரங்கள் 88	,,
	விமான நிலையங்கள்	,,
	மலைகள்	,,
	நதிகள்	,,
	முக்கிய தொழில்கள்	95
	முக்கிய சமூக இனப் பிரிவுகள்	,,
	முக்கிய கலைகள்	,,
	முக்கிய பயிர்த் தொழில் உற்பத்தி	,,
	புகழ்பெற்ற கேரள நாட்டுப் பெரியவர்கள்	96
	அரசியல் குறிப்புகள்	,,
	இயற்கை அழகும் மக்களின் சிறப்புக்களும்	97
	கேரளத்தின் மிக முக்கிய குறிப்புகள்	,,
	முக்கியப் பதவிகளில் கேரளப் பெண்கள்	98

1. செருமர்கள்

கேரள நாட்டுப் பூர்வீக குடிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு முன், மலையாள மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்துச் சிறிது பேசவும், பேசுவதைப் புரிந்துகொள்ளவும் பழகிக்கொண்டேன். கேரளத்தில் விசித்திர முறைகள் வேர் ஊன்றியிருந்தன. அவை இன்று வேரோடு மறைந்துவிட்டன என்று கூறுவதற்கு இடமில்லை. அங்கே ஓர் இன மக்கள் உயர் வகுப்பினரைத் தொடக் கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் நிழல்கூட உயர் வகுப்பாரின்மேல் விழக்கூடாது. இன்னும் சில ஜாதியார் கூப்பிடு தூரத்திலே நின்றுதான் பதில் கொடுக்க வேண்டும். இன்னும் சிலரோ கண்ணெதிரிலேகூட வரக்கூடாது.

இந்தக் கொடுமையான தீண்டாமை வழக்கத்தில் இந்தக் கேரள நாட்டு மக்கள் இருந்த நிலை கண்டே கேரள நாட்டை ''பைத்தியக்காரர் விடுதி'' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

பாரதியாரோ தாழ்ந்த மக்களுக்காகக் கண் கலங்கி,

''பறைய ருக்கும் இங்குத் தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை.

என்று பாடிச் சென்றார்.

கேரள நாட்டில் இந்தத் தாழ்ந்த வகுப்பாரை நடத்தும் கொடுமையைக் கண்டு மனம் கலங்கிப், பாரதியார் காலத்தில் வாழ்ந்த மலையாளக் கவி ''மகாகவி குமரன் ஆசான்'' என்பவர் அவரைப்போலவே பின்வருமாறு பாடியுள்ளார்.

''தொட்டு கூடாத்தவர்,
தீண்டிக் கூடாத்தவர்,
திருஷ்டியில் பட்டாலும்,
தோஷம் உள்ளோர்,
கெட்டில் லாத் தோர், தம்மில்
உண்ணாத் தோர் இங்ஙனே
ஓட்டல்லஹோ ஜாதிக் கோமரங்கள்.

''தொடக்கூடாதவர்கள், (தாழ்த்தப்பட்டவர்களின்) நிழல் படக்கூடாதவர்கள், கண்ணில் பட்டாலும் தீட்டு அடைந்தவர்கள், தம்மில் பெண் கொடுக்கல் வாங்கல் இல்லாதவர்கள், சேர்ந்து உண்ணாதவர்கள், இப்படி எண்ணில்லாத ஜாதிகளின் ஆவேசப் பூசாரிகள் இருக்கின்றனர்'' என்று இந்தத் தாழ்ந்த வகுப்பாரைக் கொடுமையாக நடத்தும் மேல்வகுப்பாரைப் பார்த்து ''ஆவேசப் பூசாரிகள்'' என்றே பாடிக் கண்ணீர் விட்டுச் சென்றார்.

இங்ஙனமாக இருந்த நாட்டில் முதன் முதலில் கோவில்களில் ஹரிஜனங்களைப் போக அனுமதித்ததை நினைக்கும் போது, அந்தப் பெருமை திருவாங்கூர் சமஸ்தானத்தை அல்லவோ சேருகின்றது என்று பல நாட்கள் சிந்தனை செய்ததுண்டு.

நம் நாட்டில் வாழும் குருவிக்காரர்களைப்போல் மலையாள நாட்டிலும் கழுத்து நிரம்பக் கீரை மணியையும் முத்து மணியையும் அணிந்துகொண்டு வாழும் ''கழுத்து மணி அணிந்த செருமர்''களைக் காணச் சென்றேன். ஆகையால் கூர்க்கு வழியாக ஒரு நண்பர் உதவிய ஜீப்பில் போய்க்கொண்டிருந்தேன்.

தென்னிந்தியாவில் மலைகளின் அழகையும் காடுகளின் பயங்கரத்தையும் காண வேண்டுமென்றால் மலையாள நாட்டுக்குத்தான் போக வேண்டும். பச்சைப் பசேலென்று இருக்கும் மலைகளின்மேல், தேவகன்னியரோ இவர்கள் என்று நினைக்கும்படி, மலையாளிகள் வெள்ளை முண்டுகள் அணிந்து மலைகளில் இப்படியும் அப்படியும் போவதைக் கண்டால், கண்களுக்கு மட்டுமன்று, உள்ளத்திற்கும் இன்பமாகத்தான் இருக்கிறது. மலையாள நாட்டுக் காடுகளில் எடுப்பான மரங்களையும் மலையைப்போல் கம்பீரமான மலைப்பாறைகளையும், பாறைகளின் இடுக்குகளில் உருண்டோடி வரும் அருவிகளின் ஓசையையும், மரங்களில் தொங்கிக்கொண்டிருக்கும் பழங்களைப் பறவைகள் உண்ணும்போது ஏற்படும் ஓசையையும் கேட்கும்போதும் காணும்போதும் மிகவும் அழகாகவும் இன்பமாகவும் இருக்கும். மலைகளின் நடுநடுவே தூரத்தில் கொம்புகளின் மேல் நின்று பறவைகளால் பயிர்களுக்குச் சேதமுண்டாகாமலிருக்க அவர்கள் கொடுக்கும் கூக்குரலும் கேட்பதற்கும் காண்பதற்கும் இன்பமாக இருக்கும். இவ்விதமான இன்பக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே நான் ஜீப்பில் சென்றேன். கடைசியில் வயநாடு—நிலம்பூர் எல்லையை அடைந்தேன்.

ஜீப்பை விட்டு இறங்கியதும், ஜீப்பைக் கொடுத்துதவிய நண்பருக்கு நன்றி கூறிவிட்டு, என் மூட்டைகளை எல்லாம் தோளின்மேல் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

சிறிது தூரம் சென்றதும் கையில் ரோடு படத்தை எடுத்து வைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். அங்ஙனம் கையில் ரோடு படத்துடன் அந்தக் காட்டுப் பாதையில் நடக்கும்பொழுது காதுகளாலும், கண்களாலும் பக்கத்தில் உண்டாகும் ஓசைகள். காணப்படும் காட்சிகள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் நடக்க வேண்டும். ஒரு பக்கத்தில், 'தனிமையாகக் காட்டு வழியில் நடந்துபோகிறோமே' என்ற எண்ணம் உண்டானது. கடைசியில் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒரு டீக்கடை இருந்தது. வேகமாக நடந்து அந்தக் கடைக்குச் சென்றேன். கடையில் என்னைக் கண்டதும் ''ஷாயா'' என்று கேட்டார்கள். நானும், ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினேன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்களிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன். பிறகு அவர்கள் மூலம் வழியறிந்து அங்கு ஒரு மலையாள நண்பர் இல்லத்தில் தங்கி, அங்கிருந்து கொண்டு பல நாட்கள் 'கழுத்து மணி அணிந்த செருமர்' களின் குடிசைக்குச் சென்று ஒன்று இரண்டு நாட்கள் தங்கி குறிப்புகள் எழுதுவதும் பிறகு நண்பரின் இல்லத்துக்கு வருவதுமாக இருந்தேன். கழுத்து மணி அணிந்த செருமர்கள் வாழுமிடத்தை ''அம்சம்'' என்று கூறுகின்றனர். அவர்கள் வயநாட்டில் சிதறுண்டு காட்டிலும், மலைகளிலும் வாழ்கிறார்கள். இயற்கை அன்னையின் சூழ்நிலையில் வாழும் அவர்களின் அம்சங்களைப் பார்த்தால் நகரத்திற்கே வர விருப்பமில்லாமல் இருந்தது. ஆனால் அடிக்கடி இல்லத்தின் நினைவு மட்டும் வரும். ஒரே இடத்தில் வாழ்ந்தால், இந்தத் தனிமையின் துயரமும் கவலையும் எப்படி ஏற்படுகின்றன என்ற ஓர் அனுபவமிருக்காது அல்லவா?

கண்களுக்கு எட்டிய தூரமெல்லாம் மரங்களும் மலைகளும்தான் தெரியும். சில்லென்ற காற்று வீசிக்கொண்டே இருக்கும். எவ்வளவு தூரம் வேண்டியதாக இருந்தாலும்

நடக்கலாம். அலுப்புத் தெரியாது. இயற்கை அன்னை காட்டில் வாழும் மக்களைத் தன் துணியில் மூடிக்கொண்டிருக்கிறாளோ என்று நினைக்கும்படி அடர்ந்த காட்டு மரங்களின் மத்தியில் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களின் குடிசைகள் வரிசை வரிசையாகச் சில இடங்களிலும் தனித் தனியாகச் சில் இடங்களிலுமிருக்கின்றன.

பண்டைக் காலத்தில் அவர்கள் காட்டை விட்டு நாட்டுக்கு வரமாட்டார்களாம். ஆனால் இன்று ஊருடன் கலந்து வாழ்கிறார்கள். அப்படி ஊருக்குள் வரும் மக்களை ஊரார் ''செருமக்களே'' என்று அழைத்து அவர்களுக்கு ஏதாவது கூலி வேலை கொடுக்கின்றனர். அவர்களுக்கு ''இதுதான் சொந்த ஊர்'' என்று கூறுவதற்கேற்ற ஓர் ஊர் இல்லை. அவர்கள் நாடோடி வாழ்க்கையினர் நவம்பர், டிசம்பர், ஜனவரி, மாதங்களே மிகச்சிறந்த மாதங்கள் அவர்களைக் காண. அவர்கள் வாழும் குடிசைகளுக்குச் ''சாளா'' என்பது பெயர். நான் தங்கிபிருந்த குடிசையிலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்த மற்றொரு குடிசைக்குப் போனேன். பேசிக்கொண்டே இருந்தவர்கள், என்னை எந்தக் குடிசையில் இருக்கிறீர்கள் என்ற பொருளில், ''சாளா எவ்டே உண்டு?'' என்று கேட்டார்கள். அவர்கள் காட்டில் பண்ணையாரிடம் உழவுத்தொழில் செய்தல், காட்டில் பழ மரங்களைப் பார்ப்பது முதலிய வேலைகளைக் கவனிக்கும் வேலைக்காரர்கள். மேலும், அதே செருமர்களைச் சில மலையாளப் பகுதியில் புலையர்கள் என்று கூறுகிறார்கள். ஒரு காலத்தில் அவர்கள் ஜமீந்தாரர்களால் அடிமைகளாக வாங்கவும் விற்கவும் பட்டார்கள். ஆனால் 1862-இல் இப்படி அடிமைகளாக மனிதரை மனிதர் விற்பனை செய்வதைச் சட்ட விரோதமாக்கிவிட்டனர்.

பண்டைக் காலத்தில் அவர்களுக்குச் சந்தைகளுக்குப் போகவும், கோவிலுக்குள் நுழையவும் ஊருக்குள் வரவும்

அனுமதி கிடையாது. ஆனால் அந்தக் காலமெல்லாம் மாறி விட்டது. இப்பொழுது அவர்கள் மற்ற மக்களுடன் சகஜமாகப் பழகுகிறார்கள். அந்தச் செரு மக்களில் சற்று அழகுள்ள பெண்களை மற்றவர்கள் கலப்பு விவாகம் செய்து கொள்ளுகின்றனர். இன்று மலையாள நாட்டில் மனிதனை மனிதராக எண்ணி நடத்துகின்றனர். அந்தச் செருமக்கள் சட்டி பானைகளைத்தான் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். சிலருக்குச் சிறு சிறு நிலங்கள் சொந்தமாக இருந்தாலும், பெருவாரியான மக்கள் கூலி வேலைதான் செய்கின்றனர்.

ஆண்கள் பரட்டைத் தலையுடனும், ஓர் அழுக்கு அடி முண்டுடனும் (அடி வேட்டி) இருக்கிறார்கள். நான் முதல் முதலில் அவர்களுடைய குடிசைகளை நாடிச் சென்றபோது, என்னைக் கண்டவர் முதலில் பெண்கள்தான். உடனே பெண்கள் ஓடிச்சென்று வயலில் வேலை செய்யும் ஆண்களிடம் கூறினார்கள். ஆண்கள் என்னை எப்படி வரவேற்க வந்தார்கள் தெரியுமா? மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வயலில் வேலை செய்யும் அரிவாள், கடப்பாரை, மண்வெட்டி, தடி இவைகளுடன் ஓடிவந்து என் எதிரில் நின்று, "எந்த! எவ்டே!" என்று கேட்டார்கள். தன்னந் தனிமையில் ஒரு காட்டில் இப்படி கையில் ஆயுதங்களுடன் ஓடிவந்து என் எதிரில் நின்றால், எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று நீங்களே சிந்தனை செய்து பாருங்கள்.

ஆண்கள் வரிசையாக நின்றதும், "உங்களைக் காண வந்தேன். உங்களைப் படம் பிடிக்க வந்தேன். உங்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் பத்திரிகையில் எழுத வேண்டும்" என்று கூறி, அவர்கள் வரிசையில் நிற்கும்பொழுதே படம் பிடிக்க ஆரம்பித்தேன். இப்படி நான் போனவுடன் படம் பிடித்தது என் அனுபவத்தில் இதுதான் முதல் தடவை.

ஒவ்வொரு காட்டில் ஒவ்வொரு விதமாக நாம் அவர்களுடைய மனத்தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். 'ஓ! படம் என்றால் அவர்களுக்குப் பிரியம் அதிகம்' என்பதை உடனே தெரிந்து கொண்டேன். பிறகு ஏன் என் காமராவைக் கீழே வைப்பேன். 'கிளிக்—கிளிக்' என்று என் காரியத்தைச் செய்து கொண்டே இருந்தேன். ஆண்களின் உடல் முழுவதும் ரோமங்கள் வளர்ந்திருக்கின்றன. உடலும் கட்டுடன் இருக்கின்றது. பகலில் வயலில் வேலை செய்தபின் பரம ஏழைகளாக இருந்தாலும் ஆண்களும் பெண்களும் இரவில் குளித்த பின்தான் சாப்பிடுகிறார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேட்டி கட்டுவதில் வித்தியாசமில்லை. ஒரே வேட்டியை அடிமூண்டாகத்தான் கட்டுகிறார்கள். பெண்கள் குள்ளமாக இருக்கிறார்கள்.

கழுத்தைத் திருப்ப முடியாதபடி பாசிமணிகளையும், கிரைமணிகளையும் அணிந்துகொண்டிருக்கிறார்கள். மணியுடன் கழுத்தில் அழகிய பழைய காசுகளைக் கோத்துக் காசு மாலையாக அணிந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் காசு மாலைகளைத் தலைமுறை தலைமுறையாகத் தாய் தன் மூத்த மகளுக்குப் போடுவாளாம். இந்தச் செய்திகளைக் கேட்ட நான் உடனே அந்தக் காசுகளைக் கவனித்தேன். அவை சேர, சோழ, பாண்டியர்களுடைய காசுகள் என்றும், சிலருடைய காசுகள் பழைய இங்கிலாந்து அரசனுடையவை என்றும் தெரிந்துகொண்டேன்.

நம் ஊர் குருவிக்காரிகளைப்போல்தான் இவர்கள் கையிலும், கழுத்திலும், காதிலும் அணிகள் அணிந்து கொண்டிருக்கிறார்கள். இரவில் இங்கு ஒரே கடுமையான இருளாக இருந்தாலும், விகாரமாகக் கண்ணில் எதுவும் படவில்லை.

பெண்கள் தங்கள் மார்பை மூடும் வழக்கம் இங்கு இல்லை. ஆகையால் நான் ஒருத்தியிடம் ''வயலில் வேலை செய்யும் பொழுதாவது மார்பை மூடிக்கொண்டு வேலை

செய்யக்கூடாதா?'' என்று கேட்டேன். அதற்கு அவள் என்ன பதில் கூறினாள் தெரியுமா? ''மார்பை மறைத்துக் கொள்வதற்கு நாங்கள் கெட்ட நடத்தை உடையவர்களா? மனச் சுத்தமிருந்தால் அதுதான் எங்கள் பெண்குல தெய்வத்துக்கு உகந்தது. மேலுக்கு மார்பை மூடிக்கொண்டு மறைமுகமாகக் கணவனுக்கோ, பெற்றோர்களுக்கோ பாவம் செய்வது மார்பைத் திறந்திருப்பதைவிடப் பாவம் அல்லவா?'' என்று பதில் கூறினாள். மேலும் பெண்களும், ஆண்களும் நகைகளையணிய விரும்புவதில்லை. பலவர்ண ஆடை அணிந்து கொள்வதற்கும் ஆசைப்படார். ஆனால் பெண்கள் இன்று சந்தைகளுக்குப் போகும்பொழுது மாத்திரம் அடிமுண்டும், ஒரு சட்டையும் அணிந்துகொண்டு போகிறார்கள். திருமணத்துக்கும், திருவிழாவுக்கும் இதே ஆடைகளுடன் தான் செல்வார்கள். ஆனால் மார்பை மறைக்கும் பழக்கம் அடியோடு மறைந்துவிடும் என்று கூறமுடியாது. ஏனென்றால் ஆண்கள் எதிரிலேயே பெண்கள் நிர்வாணமாகக் குளிக்கும் பழக்கம் இன்னும் பல காடுகளில் இருக்கின்றது. மேலும், காட்டில் பெண்கள் தங்கள் பற்களைப் பொடி வைத்துக் கறுப்பாக்கிக் கொள்ளும் பழக்கமுமிருக்கிறது. இவர்களிடம் படுப்பதற்குக் கட்டிலோ, மெத்தையோ கிடையாது. ஒரு தலையணையும் பாயும்தான் உபயோகப்படுத்துகிறார்கள். மழைக்காலங்களிலும், குளிர் காலங்களிலும் கம்பளிப் போர்வையை உபயோகப்படுத்துவதில்லை. துப்பட்டியால்தான் போர்த்திக்கொள்கிறார்கள்.

குழந்தை பிறந்ததும் அதைப் பாயில் படுக்க வைக்கின்றனர். குழந்தைக்குக் குறிப்பிட்ட நாளில் நாமகரணம் செய்வதென்ற சட்டமில்லை. எப்பொழுது வசதியோ அப்பொழுது பெரியவர்களின் மூலம் பெயர் வைப்பதுண்டு. அன்று விருந்து நடைபெறும். அவர்கள் சமுதாயத்தில் குழந்தைக்குத் தொட்டிலும், ஏணையும் இரண்டும் போடுவ

தில்லை. காரணம் கேட்டதற்கு, ''நாங்கள் காலை முதல் மாலை வரையில் மலையிலும், வயலிலும் வேலை செய்வதின் நிமித்தம் எங்கள் குழந்தைகளை முதுகிலேயே கட்டிக் கொள்ளுவோம்'' என்று கூறினார்கள்.

அவர்களின் குடும்பத்தில் ருதுவான பெண்ணை வீட்டில் தான் ஒரு மூலையில் உட்கார வைப்பார்கள். அதற்குத் தனி இடமில்லை. அவள் மற்ற பெண்களைப்போலவே சாதாரண மாய்ப் பழகுவாளாம். ஆனால் சுமார் பத்து நாட்கள் வரை யில் அவளுக்கு நல்ல சாப்பாடு கொடுப்பதுண்டாம். அவள் தூங்குவதற்கும், உட்காருவதற்கும் பாய்தான் உபயோகப் படுத்துகிறார்கள். ஏழாவது நாள் ஊர் விருந்துடன் அழைப்பு நடைபெறும்! நல்ல நாட்களிலும் சந்தோஷமான நாட்களி லும் ஆண்களும் பெண்களும் சேர்ந்தோ அல்லது பெண்கள் மட்டும் தனித்தோ கூத்தாடுகின்றனர். கேரள நாட்டில்தான் கண்ணகிக்குக் குரவைக் கூத்து விசேஷமாக ஆடினார்களாம். மலையாள நாட்டில் வாழும் நகரவாசிகளைக் காட்டிலும் மலையிலும் காட்டிலும் வாழும் மக்கள், ஒவ்வொரு நிகழ்ச்சிக் கும் ஒவ்வொரு கூத்து வகையை கையாளுகிறார்கள். மேலும், மலையாள நாட்டில் வழங்கும் ''கதகளி'' என்னும் கூத்து தமிழ்நாட்டின் பண்டைய கூத்தே ஆகும் 'கதகளி' என் பதற்குக் 'கதையுடன் தழுவிவரும் கூத்து' என்பது பொருள். மேலும், பண்டைக் காலம் முதல் இசைக்கும், கூத்துக்கும் மலையாள நாடு முதன்மை பெற்றுள்ளது. இளங்கோவடிகள் என்னும மலையாள நாட்டுக் கவிஞர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கேரளத்தை ஆண்ட சேர மன்னனின் இளவல் ஆவார். இவர் தாம் எழுதிய சிலப்பதிகாரம் என்னும் நூலில் அக்காலச் சேர, சோழ பாண்டிய நாடுகளில் ஆடிய கூத்துக் களைப் பற்றிக் கூறி இருக்கிறார். அந்தக் கூத்துக்களை இன்று சில இடங்களில் மலையாளிகள் சில வித்தியாசங் களுடன் ஆடுகின்றனர்

ஆடிப் பண்டிகை, பொங்கல், தீபாவளி, ஓணம் முதலிய பண்டிகைகளிலும் பௌர்ணமி தினத்தன்றும் வட்டமாக நின்று தீமூட்டி ஆடும் காட்சியைக் கண்ட நான், சாரணர் கூடி இரவில் தீமூட்டி ஆடுவதை நினைத்துக்கொண்டேன். ஆனால் அவர்கள் என்றும் சாரணர்களாகவே இருக்கின்றனர். செருமர்கள் உடலில் பச்சை குத்திக்கொள்வதில்லை. நெற்றியில் திலகமும் இட்டுக்கொள்வதில்லை. பெண்கள் மிக்க ஏழையாக இருந்தாலும் முதல் பிரசவத்திற்குத் தாயகம் போகின்றனர். அவர்களுக்குத் திருமணச் சடங்கு, தேதி குறிப்பது முதலியவைகள் யாவற்றையும் மூப்பன்தான் தெரியப்படுத்த வேண்டும். திருமணத்திற்கு மணமகனையும் மணமகளையும் தேர்ந்தெடுக்கும் முறையே ஒரு தனிக்கலை. சுறுசுறுப்புள்ளவர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுப்பார்களாம். திருமணத்தில் பந்தக்கால் நாட்டுவதில்லை ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் திருமணரத்து செய்துவிட்டு எத்தனைத் திருமணம் வேண்டியதாக இருந்தாலும் செய்துகொள்ளலாம். மணஞ் செய்துகொண்ட முறையான மனைவியர் இல்லாமல் ஆசை நாயகிகளும் உண்டு.

திருமணத்திற்கு முன் குழந்தை பிறந்தால் அவளுக்கு நடனங்களுடன் வீட்டில் திருமணமாகும். திருமணத்தில் எவ்வளவோ இன மக்கள் தாலிகட்டுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இவர்களுடைய சடங்கே ஒரு தனிவிதம் தான். திருமணக் கூட்டத்தில் பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டாருக்குப் பணம் கொடுப்பதுதான் தாலி கட்டுவதைப் போன்ற சடங்காகும். தாலி கட்டிய பிறகு தம்பதிகளை ஊர்வலமாகக் கொண்டு வருவார்கள். ஊர்வலத்தில் அந்த அம்சத்தில் வாழும் எல்லாச் செருமர்களும் ஒன்றுகூடிச் செல்வர். அங்ஙனம் செல்லும்பொழுது நடுநடுவே அங்கங்கே நின்று தடியாட்டம் ஆடுவர். அப்பொழுது பெண்கள் ஆண்

களுக்கு ஊக்கமூட்டும் முறையில் கைகொட்டிச் சிரித்து, ''உம்! பார்க்கலாம்—பார்க்கலாம். உங்கள் தடியாட்டத்தைப் பார்க்கலாம்'' என்று பாடுவார்கள். அப்பொழுது ஆண்களும் பெண்களும் ஒன்றாக அணைத்துக்கொண்டு புதிய தம்பதிகளுக்குக் காதல் உணர்ச்சி உண்டாகும் வகையில் கூத்தாடுவார்கள். பிறகு மணமகனின் இல்லத்தினுள் நுழைந்ததும் மணப்பெண் கதறிக் கதறி அழுகிறாள். அதன் பொருளை என்னால் புரிந்துகொள்ள முடியாததால், ''பாவம்! ஏன் அழுகிறாள்?'' என்று கேட்டேன்.

பக்கத்திலிருந்த நண்பர் என்ன கூறினார் தெரியுமா? ''அவள் இனி உலகில் உண்டாகும் எல்லா நன்மை தீமைகளுக்கும் ஆளாகப் போகிறோமே'' என்றும், ''புதிய குழந்தைகள் இந்தப் பாழும் உலகில் பிறக்க நான் காரணமாக வேண்டுமே என்றும் நினைத்து அழவேண்டும்'' என்று விளக்கினார். இவ்வாறே தமிழ்நாட்டில் வாழும் குருவிக்காரர்கள் மற்றொரு விதமாக அழுகிறார்கள்.

குழந்தை பிறந்ததும் குருவிக்காரிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ''ஐயோ! குழந்தையே? இந்தப் பாழும் உலகில் ஏன் பிறந்தாய்!'' என்று அழுது புலம்புவார்கள்.

செருமர்களில் திருமணப் பெண் முதன் முதலில் மணமகன் இல்லத்தில் புகும்பொழுது, வழியில் குறுக்கே போடப்பட்டிருக்கும் உலக்கையை இடது காலால் மிதித்துக்கொண்டு போக வேண்டும். இதனுடைய கருத்தைப் பலரிடம் கேட்டேன். பலர் பலவிதம் கூறினார்கள். அந்தக் கருத்தை இங்கே எழுத இயலாது. அவர்களது சமுதாயத்தில் பால்ய விவாகமில்லை. ஆனால் விதவைகளுமில்லை. பண்டைக் காலமுதல் தற்காலம் வரையில் காதல் திருமணம்தான்

நடைபெறுகின்றது. திருமணமானதும் தம்பதிகள் இருவரும் மதுபானம் செய்கின்றனர். விதவைகளைத் திருமணம் செய்யும்போதும் இதே சடங்குகள்தான் நடைபெறும்.

தம்பதிகளுக்குள் சிக்கல் ஏற்பட்டால் மூப்பன் உடனே விவாக விலக்குக்கு ஏற்பாடு செய்துவிடுகிறார். அதாவது பெண் வீட்டார், அன்று மணமகனுக்குக் கொடுத்த பணத்தை, மூப்பன்மூலம் திருப்பிக் கொடுத்துவிடுவதே விவாகரத்தாம்.

இவர்கள் சதுப்பு நிலங்களில் வாழ்வதால், அடிக்கடி மலேரியாக் காய்ச்சலுக்காளாகின்றனர். வியாதி வந்தால் காட்டில் கிடைக்கும் மருந்துகளைத்தான் கொடுக்கின்றனர். சுகமாகாவிட்டால் உப்பு, காய்ந்த மிளகாய், புளி, நல்லெண் ணெய், கடுகு, தேங்காய், காசு முதலியவைகளை ஒரு மண்ணால் செய்த தட்டில் வைத்து, நோயாளியின் தலையை மூன்று முறை சுற்றுவார்கள். பிறகு சுற்றிய பொருள்களை வாசலில் தீமூட்டி எரிப்பார்கள். அந்தப் பொருள்கள் எரியும் பொழுது உண்டாகும் நெடியின் வேகத்தில் எல்லோரும் தும்முவார்கள். உடனே அந்த வியாதி காற்றில் பறந்து போகுமாகும்.

அந்த மங்கையர்கள் கருவுற்றிருந்தால், அந்த நாட்களில் சிலர் வாந்தி எடுப்பதுண்டு. அந்தப் பலவீனத்தை ஈடுபடுத்தக் கர்ப்பிணிகளுக்கு ஆறு மாதம் வரையில் கருங்குரங்குகளின் இறைச்சியைக் கொடுக்கின்றனர். வாந்தி எடுத்த பலவீனத் தால் சில மங்கையர்களுக்கு ஆஸ்த்மா உண்டாகாமலிருக்க முன்கூட்டியே அணிலின் இறைச்சியைச் சமைத்துக் கொடுக் கின்றனர். அணிலின் இறைச்சியையும் குரங்கின் இறைச்சி யையும் ஆஸ்த்மா இருப்பவர்கள் எல்லோரும் சாப்பிடலாம். இங்ஙனம் ஆஸ்த்மா இருந்தவர்களுக்கு அணிலின் இறைச்சி

யையும், குரங்கின் இறைச்சியையும் குருவிக்காரர்களின் மூலம் வாங்கிக் கொடுத்ததால் வியாதி உள்ளவர்கள் சுகமடைந்திருக்கின்றனர். இது நான் நேரில் கண்ட அனுபவம்.

செருமக்கமார்கள் இறக்கும் தறுவாயிலிருப்பவர்களுக்கு அரிசிக் கஞ்சியும் தண்ணீரும் கொடுக்கின்றனர். உயிர் போனவுடன் சக்திக்குத் தகுந்தபடி பாடை கட்டி அதில் பிணத்தை வைத்து உடனே மயானத்திற்குக் கொண்டு போய்ப் புதைத்து விடுவார்கள். புதைத்த இடத்தை மயானத்திற்குப் போனவர்கள் ஏழு முறை சுற்றியபின் திரும்பிப் பார்க்காமல் குளத்தில் குளித்துவிட்டு வர வேண்டும். மரணமடைந்தவர்களுக்குப் பதினைந்தாவது நாள் மரித்தவர்களுடைய துணிமணிகளையும் அவர்கள் வயலில் உபயோகப்படுத்திய பொருள்களையும் நடு வீட்டில் வைத்துப் படைப்பார்கள். பிறகு அன்று அங்கே கூடி இருப்பவர்களுக்கெல்லாம் விருந்து நடைபெறும்.

அவர்கள் நம்மைப்போல் போலீஸ் ஸ்டேஷனுக்கோ, நீதிமன்றத்திற்கோ போகமாட்டார்கள். குற்றமும் செய்யமாட்டார்கள். அப்படிக் குற்றம் செய்து, அவர்கள் வாழும் அம்சத்தில் சண்டை உண்டானால் அது உடனே அன்றிரவே மூப்பன் முன்னிலையில் விசாரிக்கப்படும். பிறகு அந்தக் குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டனை கொடுக்கப்படும். தண்டனையை ஏற்க யாரும் மறுக்கமாட்டார்கள். அந்த ஒரு கட்டுப்பாடு இன்னும மறையாமல் இருக்கிறது.

நான் பழகிய வரையில் மலையாளிகள் என்ன வேலை வேண்டியதாக இருந்தாலும் செய்வார்கள். எந்த வேலையைச் செய்தாலும் சரி. அவர்களை மற்றவர்கள் கேவலமாக நடத்தவோ, மரியாதைக் குறைவாகப் பேசவோ மாட்டார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் இரண்டு மூன்று வேட்டை நாய்களை வளர்க்கின்றனர். அவைகள் மான், முயல், காட்டுப் பன்றி முதலியவைகளை வேட்டையாடு

கின்றன. அவர்கள் வேட்டையாடும் பொருள்களை எல்லாரும் பகிர்ந்து சாப்பிடுகின்றனர். சாதாரணமாய் எல்லாவித உணவுகளையும் சாப்பிடுகிறார்கள்.

அவர்கள் வணங்கும் தெய்வங்களுக்குக் கணக்கில்லை. எல்லாத் தேவதைகளையும் வணங்குகிறார்கள். பேய், பிசாசு, மந்திரம் முதலியவைகளுக்குக் கணக்கில்லை. சூனியம் முதலியவைகளில் நம்பிக்கை அதிகம். செருமர்கள் கொச்சை மலையாளம் பேசுகிறார்கள். நான் சிறிது காலம் மலையாள நண்பரின் இல்லத்தில் தங்கியிருந்தேன். அங்ஙனம் தங்கியிருந்த நாட்களில் மலையாள மொழியை அவ்வளவாக அறியாத நான் அவர்கள் பேசும்போது, சில வாக்கியங்களை நன்றாகப் புரிந்துகொண்டேன். மலையாளிகளின் இல்லங்களில் வழங்கும் சாதாரணப் பொருள்களுக்கு மலையாளத்தில் சொல்லும் பெயர்கள் தமிழே. மலையாளத்தோடு கலந்திருக்கும் வடமொழியை நீக்கினால் மீதியாக நிற்கும் மொழி தமிழே. தமிழ் இல்லை என்றால் இன்றைக்கு மலையாளத்தில் பேச இயலாது என்பது பல தமிழ், மலையாள மொழி ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இது முற்றிலும் உண்மை. இன்றும் காட்டில் வாழும் மற்ற மலையாள ஆதிவாசிகள் முழுக்க முழுக்க கன்னடமும், தமிழும் கலந்து, வடமொழி கலக்காமல் பேசுகிறார்கள்.

மேலும், கேரளத்தின் தாய் மரபு, தமிழ் மரபே ஆகும். சிலப்பதிகாரத்திற்குப் பின்பும், நன்னூற் காலத்திற்கு முன்பும் ''சேர நாடு'' கேரளமாக மாறிவிட்டது.* அதாவது கொடுந் தமிழும், சம்ஸ்கிருதமும் கலந்த கலப்பு மொழி மலையாளமாக மாறியது. கழுத்து மணி அணிந்த செருமர்களைக் கொஞ்சம் படிக்க வைத்தால், அவர்கள் காட்டு இலாக்காவுக்கு மிகவும் நல்ல முறையில் தொண்டாற்றுவார்கள் என்று நினைக்கிறேன்.

---

* சேர்+அளம்=சேரளம் பிறகு கேரளமானது.

2. மலைப் பணிக்கன்மார்

“மலைப் பணிக்கன்மார்களைக் காண நீர் மலைக்குத் தான் போக வேண்டும்” என்று வயநாடு—நிலம்பூரில் கூறினார்கள். ஆகையால் வடபுரம், மம்பாடு மலையடிவார அம்சத்தைப் போய்ச் சேர்ந்தேன்.

பிறகு நண்பர் மூலம் வழியறிந்து ஒற்றையடிப் பாதையில் சுமார் மூன்று மைல்கள் நடந்து, “மச்சன் பெட்டி” என்ற காட்டை அடைந்தேன். அங்கே பயங்கரமான பெரிய பெரிய மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அந்த மரங்களின் மத்தியில் “மலைப் பணிக்கன்மார்” கூட்டம் கூட்டமாகக் குடிசையில் வாழ்கிறார்கள். அவர்கள் வாழுமிடத்திற்கு “அம்சம்” என்று பெயர். பேசும்பொழுது ‘எங்கள் ‘அம்சிகா’ போகிறேன்’ (ஞங்கள் அம்சிகா போகணு) என்று கூறுகின்றனர். ஓர் அம்சத்தில் சுமார் பத்துப் பதினைந்து குடிசைகள் இருக்கின்றன. குடிசையை நெருங்கியதும் அரை உடையில் ஒரு மாது புன்னகையுடன் என்னைக் கண்டு, “எவ்டே! வரி! வரி!” என்று வரவேற்றாள்.

இவர்கள் குடிசைகளை மண் சுவரின்மேல் ஓர் ஆள் உயரத்துக்குத் தூக்கிக் கட்டுகிறார்கள். சாதாரணமாய்த் தமிழ் நாட்டு ஆதிவாசிகள் காடுகளிலும், மலைகளிலும்

திண்ணைகளைக் குடிசைக்கு வெளியில்தான் அமைக்கின்றனர். ஆனால் மலையாள நாட்டு மலை மக்களோ திண்ணைகளைக் குடிசையின் உட்பகுதியில் அமைக்கின்றனர். இதைக் கவனித்த நான் அவர்களிடம் காரணம் கேட்டேன். அதற்கு அவர்கள், ''இங்குக் காட்டு யானைகளும், மலைப் பாம்புகளும் அதிகம். திடீரென்று மழை கொட்டுக் கொட்டென்று கொட்டும். சில சமயங்களில் ஒரு மாதம்கூட மழை விடாமல் பெய்யும். அந்தச் சமயத்தில் வெளியில் ஒரு வேலைக்குக்கூடத் திண்ணை உபயோகப்படாது. ஆகையால் சாதாரணமாய் இந்த மலைப் பிராந்தியத்தில் குடிசை கட்டுகின்றவர்கள் எல்லாரும் உள்ளேதான் திண்ணையை அமைப்பது வழக்கம்'' என்று கூறினார்கள்.

இவர்கள் குடிசையில் மண் பத்திரங்கள்தான் இருக்கின்றன. இவர்கள் தங்கள் குடிசையைச் ''சாளா'' என்று சொல்லுகிறார்கள். மற்ற ஊர்களிலிருக்கும் ஆதிவாசிகளின் குடிசைகளைப்போல் இல்லாமல் குடிசைகளுக்குள் வெளிச்சம் இருக்கிறது. குடிசையின் மண் சுவருக்கும் குடிசைப் புல்லுக்கும் இடையில் சுற்றிலும் இடைவெளி இருப்பதால் உள்ளே வெளிச்சமாக இருக்கிறது. இரவிலும் படுப்பதற்கு மட்டும் சுற்றிலும் மூடிய நல்ல அறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு குடிசையின் மேலும் தங்கள் உபயோகத்திற்கு வேண்டிய காய்கறிக் கொடிகளைப் படரவிட்டிருக்கின்றனர். முதல் நாள் இரவு என் குடிசையிலிருந்து பக்கத்துக் குடிசைக்கு ஒரு பணிக்க நண்பருடன் போனேன். அன்று அரைப்பௌர்ணமி நாள். இருளில் எதையோ தாண்டிச் சென்றார் அவர். நான் அதைக் கவனிக்கவில்லை. என் காலில் வளைவாக ஏதோ தட்டுப்பட்டது. உடனே ''ஐயோ பாம்பு'' என்று கத்தினேன். உடனே அவர் தம்மிடமிருந்த தீப்பெட்டியின் மூலம் ஒளி காட்டினார். அப்போது பல மரங்களின் வேர்கள் ஒன்றொடொன்றாகப் பின்னிக் கொண்டிருப்பதைக்

கண்டு நடுங்கிவிட்டேன். உடனே பணிக்க நண்பர், ''இந்தக் காட்டில் மரங்களின் வேர்கள் என்று கருதிப் பலர் பாம்புக் கடிக்கு இரையாகி—சிலர் மரத்தின் வேர்களைப் பார்த்து விட்டு, ''பாம்பு—பாம்பு'' என்று பயந்து கிலி பிடித்துப் போய்க் காய்ச்சலில் படுப்பதும் உண்டு'' என்று அந்தக் காட்டில், அந்த நேரத்தில் கூறினால் எப்படி...?

ஆண்களும் பெண்களும் நல்ல உயரமான தோற்றமுள்ளவர்கள். தேகக்கட்டுடன் இருக்கிறார்கள். 'வியாதியையே பார்க்காத உடலோ இது!' என்று நினைத்துக்கொண்டேன். இவர்கள் எல்லா ஜாதியாரிடத்திலும் சகஜமாகப் பழகும் சுபாவமுள்ளவர்கள். ஆண்களும் பெண்களும் கீழ்முண்டுடன் தான் வயல்களில் வேலை செய்கின்றனர். வயல்களில் வேலை செய்யும்பொழுது ஓலைக் குடைகளைத் தலையுடன் இணைத்துக்கொண்டு இரண்டு கைகளால் வேலை செய்கின்றனர். கையால் அவர்களுடைய குடையைப் பிடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

ஆண்களின் உடல் முழுவதும் ரோமங்கள் வளர்ந்திருக்கின்றன. பெண்கள் கைகளில் பித்தளை வளையல்களும், விரல்களில் பித்தளை மோதிரங்களும், காதுகளில் ஓலைச் சுருள் தோடுகளும் அணிந்துகொண்டிருந்தாலும் அவர்கள் வெள்ளைத் துணி உடுத்துவதால் அவர்களுடைய தூய உள்ளத்தையும், கபடமற்ற தோற்றத்தையும் நன்றாகக் காணலாம். பெண்களும் எடுப்பான தோற்றமுடையவர்களே.

பண்டைக் காலத்தில் மூன்று, நான்கு வயது சிறுவர்களாக இருக்கும்பொழுதே, பால்ய விவாகம் செய்வதுண்டாம். ஆனால் 1904ஆம் ஆண்டில் 'பால்ய விவாகம்' சட்ட விரோதமாக்கப்பட்டது. ஆகையால் அரசாங்கச்

சட்டத்துக்குப் பயந்து, பால்ய விவாகம் மறைந்து, இன்று வயதுவந்தோர் விவாகமே நடைபெறுகிறதாம். அவரவர்களின் அம்சத்தில் ருதுவாகும் பெண்களுக்கென்று ஒரு தனி (குடிசை) 'சாளா' கட்டப்பட்டிருக்கிறது. எந்தக் குடிசையிலிருக்கும் பெண் ருதுவானாலும் சரி, அவளை அந்தத் தனிக் குடிசையில் ஏழு நாட்கள் குடி இருக்க வைக்கின்றனர். இரவு காலங்களில் துணைக்கு வயதான இரண்டு மூன்று மங்கையர்கள் படுத்துக்கொள்ளுகின்றனர். தனிக்குடிசையில் இருக்கும் வரையில் அவளுக்குச் சைவச் சாப்பாடுதான் கொடுக்கப்படுகின்றது. மற்ற மங்கையர்களைப்போல் இவர்களும் சகஜமாக வெளியில் போகலாம். ருதுவான பெண்களைச் சக்திக்குத் தகுந்தபடி அம்சத்தில் விருந்து வைத்து வீட்டுக்கு அழைத்துக்கொள்ளுகின்றனர். ருதுவான பெண்கள் இருக்கும் தனிக் குடிசையின் வாசற்காலில் தோல், துடைப்பம், யானை மயிர், இரும்பு முதலியவைகளைக் கட்டி வைக்கின்றனர். ஏனென்றால் பேய், பிசாசு, முனீஸ்வரன் முதலிய காட்டுத் தேவதைகள் அவளை இரவில் வந்து பயப்படுத்தும் என்பது அவர்களது நம்பிக்கை. சாதாரண நாட்களில் மங்கையர்கள் வீட்டு விலக்கானால் தனிமையில் இருப்பதில்லை. விசேஷமான நாட்களில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து நடனமாடுவதுண்டு. இந்த மலையாள ஆதிவாசிகள் ஆடும் நடனங்களைக் கவனித்தால் வெறும் உடலின் அசைவு மட்டுமே இருக்குமானால் கதையின் பொருளோ வருணனையோ வெளிப்படாது. கதையைப் புலப்படுத்தும் சங்கேதங்கள் இருக்கின்றன. அந்த நடனங்களின் அசைவில், எல்லா செய்திகளையும் உடல் அசைவுகளாலும், அழகிய வளைவுகளாலும் காட்டுகின்றனர். ஓணம் திருவிழாக்களில் யுத்த வருணனையைக் காட்டும் இவர்களது நடனம், நாம் போர் முனையில் காண்பது போன்ற ஒரு காட்சியைக் காட்டுகிறது.



பேய் நடனம்

உண்மையோடு ஒத்திருக்கவில்லையே என்று, இந்த ஆடல பாடல்களைப் பார்த்துச் சப்புக் கொட்டுபவர் 'ஷேக்ஸ்பியரின்' நாடகங்களையும் படித்துவிட்டுச் சிரிப்பார் என்றே தோன்றுகிறது. ஏனென்றால் அங்கேயும் சண்டை போடும் காட்சிகளில் சொற்கள் யாவும் சந்தர்ப்பங்களோடு ஒலிக்கின்றன. அதே விதமாக இவர்கள் ஆடிப்பாடிக் கூத்தாடுவதும் நமக்கு நன்றாக விளக்குகின்றது.

பெண்கள் நெற்றியில் அழகான திலகம் வைத்துக்கொள் கின்றனர். ஆனால் உடலில் பச்சை குத்திக்கொள்வதில்லை. உடல் முழுவதும் மழமழவென்று அழகாகக் காணப்படு கின்றது. திருமணம் செய்ய வேண்டியதாக இருந்தால் அம்சத்திலிருக்கும் மூப்பன்மூலம் பெற்றோர்கள் கலந்து பேசி முடிவு செய்கின்றனர். அப்பொழுது பெண் வீட்டார் ரூபாய் ஐம்பது பையனுடைய கையில் கொடுக்க வேண்டும்.

திருமணம் பையன் வீட்டிலோ, பெண் வீட்டிலோ நடைபெறும். திருமணத்தன்று சைவச் சாப்பாடுதான் செய்கின்றனர்.

அன்று நான்கு கால்கள் வைத்து பச்சைப் பந்தல் போடுகின்றனர். திருமணப் பந்தலில் சாதாரணமாய்த் தமிழர்கள் வைக்கும் சாமான்கள்தான் வைக்கப்படுகின்றன.

ஆண்கள் ஆசை நாயகிகளை வைத்துக்கொள்வதால் விவாகரத்து ஏற்படுவதுண்டு. அப்பொழுது திருமணத்தன்று பெண் வீட்டாரிடம் வாங்கிய ரூபாய் ஐம்பதைப் பிள்ளை வீட்டார் திருப்பி மூப்பன்மூலம் கொடுத்துவிட வேண்டும். அப்போதுதான் விவாகரத்து செய்துகொண்டதாகுமாம். இந்த மலைப் பணிக்கன்மார்களிடம் தாலி கட்டும் சடங்கு உண்டு. ஆனால் அந்தத் தாலியைத் திருமணத்தன்று கட்டுவதில்லை. மேலும் 'தாலி' என்றதொரு நகையைச் சிறுவயது முதல் சிறுமிகள் அணிந்துகொண்டே இருக்கிறார்கள். அந்தத் தாலியையே திருமணமான பின், புதியதாகச் செய்து மாப்பிள்ளையின்மூலம் அணிந்துகொள்ளுகிறார்கள். ஆனால் தாலி என்ற நகையைப் பெண்களுக்கு ஐந்து வயதாகும்போது மாமன் செய்து அன்பளிப்பாகக் கட்டும் பழக்கம் அன்றும் இன்றும் உண்டு. ஆனால் திருமணத்திற்கும், இந்த மாமன் ஐந்து வயதில் கட்டும் தாலிக்கும் சம்பந்தமே கிடையாது.

தற்காலத்தில் காதல் திருமணங்களும் நடைபெறுகின்றன. திருமணச் சடங்கிலும், மற்ற விஷயங்களிலும் மலைப் பணிக்கன்மார் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் சிக்கனமாகவும் சாதாரணமாகவும் பல சடங்குகளைச் செய்வதைக் கண்டேன். வீண் ஆடம்பரத்தையும், கடன் வாங்கிச் செலவு செய்வதையும் அதிகமாக இவர்களிடம் காணமுடியாது. பெண் விதவைகளைக் கூடுமான வரையில் ஆண் விதவைகளே திருமணம் செய்துகொள்ளுகின்றனர்.

இவர்களுக்குச் சாதாரணமாய் மலைக் காய்ச்சல் வருவதுண்டு. அப்பொழுது அது முற்றினால் கை கால் வீக்கம் கண்டு கண்ணை மூடிவிடுகின்றனர். தற்காலத்தில் ஆஸ்பத்திரிகளுக்குப் போகும் பழக்கம் சிலரிடமிருந்தாலும் மூன்று மைல் ஐந்து மைல் நடந்து போகவேண்டுமே என்ற கவலை ஒன்று. மற்றொன்று பஸ்ஸில் சென்றால் வாந்தி எடுக்கும்படி ஏற்படும் என்ற பயம். ஆகையால் வீட்டு மருந்துகளே சாப்பிடுகின்றனர். ஆனால் வியாதி அதிகமாகிவிட்டால், மாட்டு வண்டிகளில் ஆஸ்பத்திரிக்குப் போகின்றனர்.

பிரசவ சமயங்களிலும் இதே கஷ்டங்கள்தான். ஆகையால் தனிக் குடிசையில் அவர்களே பிரசவம் பார்த்து விடுகின்றனர். மேலும் கர்ப்பிணியாக இருப்பவளின் நிழல் ஒரு பாம்பின்மீது விழுமானால், பாம்பின் ஓட்டம் தளர்ந்து விடுமாம். மேலும், அதனுடைய நஞ்சுத்தன்மை நீங்கி, அது இறந்துவிடுமாம். பிறகு அந்தக் கர்ப்பிணி பாம்புக் கடிபட்டவர்களை வாயால் ஊதினால் கடிபட்டவர்களுக்கு விஷம் நீங்கும் என்று கூறுகிறார்கள்.

''கர்ப்பிணியின் வயிற்றிலிருக்கும் குழந்தையை ஆணா பெண்ணா என்று நாங்கள் கண்டுபிடிப்போம்?'' என்று ஒருத்தி கூறியதும் எனக்கு தூக்கிவாரிப் போட்டுவிட்டது.

''கர்ப்பிணியின் மார்பில் சுரக்கும் பாலை வைத்துப் பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று கண்டுபிடிப்பார்களாம். பால் சிறிய அளவு துளித்துளியாக வருமானால் பிறக்கப்போவது ஆண் குழந்தை. அவ்வாறின்றிக் கர்ப்பிணியின் பால் கெட்டியாகப் பிசின்போல் சிரமத்துடன் வருமானால் பிறப்பது பெண் குழந்தைதான். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்கள்.

சிறு வயது முதல் பெண்கள் நன்றாகக் கஷ்டப்படுவதால் பேறு காலத்தில் சிரமம் அதிகமில்லாமல் இருக்கிறார்கள். மேலும் குழந்தை பெற்றெடுத்தவள்கூட அழகாகவும் உடல் கட்டுடனும் இருக்கிறாள். மேலும், முதன் முதலில் குடும்பத்தில் பெண் குழந்தைதான் பிறக்க வேண்டுமாம். அப்பொழுது தான் குடும்பம் விருத்தியடையும் என்பது அவர்களது நம்பிக்கை. மூன்றாவது பெண் பிறக்கக்கூடாதாம். ஏனெனில் அவள் எங்கும் திரிந்துகொண்டே இருப்பாளாம். மேலும் ஒரு கணவனிடம் அவள் வாழமாட்டாள்—என்றும் கூறுகின்றனர். நான்காவது பையன் பிறந்தால் அவன் ஆடி அம்பலத்தில் நிற்பானாம். பெண் பிறந்தாலும் அதைவிட மோசம் என்று கூறுகிறார்கள். ஐந்தாவது குழந்தை பெண்ணாக இருக்கவேண்டும்—என்று எல்லாத் தெய்வத்துக்கும் பிரார்த்தனை செய்துகொள்ளப்படுகிறது. ஏனென்றால் ஐந்தாவது பெண் வீட்டு 'இலக்குமி' என்றும், பெண் பிறந்தால் கால்நடைகள் விருத்தியாகும் என்றும் நம்புகின்றனர். ஆறாவது குழந்தை கட்டாயம் ஆணாக இருக்க வேண்டும் என்று மறுபடியும் ஆண் கடவுள்களை வேண்டிக் கொள்ளுகின்றனர். ஏனென்றால் ஆறாவது பெண் இருக்கக்கூடாது. அப்படிப் பெண் பிறந்துவிட்டால் அவள் ஆறாத் துயரடையவாளாம். கடைசியில் தவறியோ அல்லது வேண்டுமென்றோ ஆற்றில் விழுந்துவிடுவாளாம். எட்டாவது பெண்ணுமிருக்கக்கூடாது. ஆணுமிருக்கக் கூடாது. அந்தக் குழந்தை எட்டிப் பிடிப்பதெல்லாம் குட்டிச் சுவராகிப் போகுமாம். அந்தக் குழந்தை எதற்கும் இலாயக்கு இல்லாததாகப் பிற்காலத்தில் இருக்குமாம். ''மேற்படி நிபந்தனைகளுக்கு விரோதமாகக் குழந்தைகள் பிறந்து விட்டால் என்ன பரிகாரம் செய்வீர்கள்'' என்று கேட்டேன்.

''அதற்காக என்ன செய்ய முடியும்? நிபந்தனைக்கு விரோதமாகப் பிறந்தால், ஆண் குழந்தைக்குப் பெண் குழந்தையின் பெயரும், பெண் குழந்தைக்கு ஆண் குழந்தையின் பெயரும் வைத்து நாமகரணம் செய்வோம்.

''இந்தத் துன்பங்கள் எல்லாம் உண்டாகக்கூடாது என்று நாங்கள் ஓரிரு குழந்தைகளுக்குமேல் பிறப்பதற்கு வழி வைத்துக்கொள்ளமாட்டோம். அப்படிக் குழந்தைகள் ஒருத்திக்கே அதிகம் பிறக்கும் என்று சந்தேகித்தால் உடனே இரண்டாவது திருமணம் செய்துகொள்ளுவோம்'' என்று கூறினார்கள். இந்தக் காரணங்களால்தான் காடுகளில் வாழும் மங்கையர்களுக்கு இரண்டு மூன்று குழந்தைகளுக்கு மேல் கிடையாது. பண்டைக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்று கூறாமல், ஒவ்வொரு குழந்தை பிறப்பதற்கும் ஒவ்வொரு அபசகுனங்களை அதில் நுழைத்து வைத்தார்கள் போலும்.

மேலும், பிள்ளைப்பேறு நடைபெறும் அறையோ, குடிசையோ, வடக்கோ அல்லது கிழக்கோ பார்த்ததாக இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது. பொதுவாகப் பேறுகாலம் ஆவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னால் கர்ப்பிணிகளைக் காய்ந்த வைக்கோலின்மேல்தான் படுக்க வைக்கின்றனர். கட்டிலிலோ, திண்ணையிலோ, பாயிலோ அவர்களைப் படுக்க வைப்பதில்லை. இந்த ரகசியத்தையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அதற்குப் பல காரணங்கள் கூறினாலும் சிலர் சொன்ன காரணங்களைப் பார்த்தால் சுகாதார விதிப்படி சுத்தமாக இருப்பதற்குத் தான் அப்படிச் செய்கின்றனர்—என்று தெரிந்து கொண்டேன்.

பேறுகாலம் முடிந்ததும் அந்த வைக்கோலை எல்லாம் தூரத்தில் கொண்டுபோய்ப் புதைத்துவிடுகின்றனர். பிறகு பிள்ளை பெற்றெடுத்த அறையை மூன்று நாட்களுக்கு விடாமல் சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்கின்றனர். ஐந்தாம் நாள் எப்பொழுதும் போலவே பிரசவமானவள் தன் குடிசைக்கு வந்துவிடுகிறாள். அதுவரையில் பக்கத்திலிருக்கும் குடிசையில் இடவசதி கொடுத்து உதவி செய்து

அவளுக்கும், அவள் குழந்தைகளுக்கும் உணவு வசதிகளும் கொடுப்பதைக் கண்டு எனக்கு அவர்களுடைய பண்பையும், மற்றவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தையும் பார்த்துப் புகழ்வதா? அல்லது நகரங்களில் நடைபெறும் குழாய்ச் சண்டைகளை நினைத்துக்கொண்டு புலம்புவதா? என்று கண் கலங்கி நின்றேன். குழந்தை பிறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு அம்சத்தின் சமுதாய மூப்பனைக் கிழக்குத் திசையின் பக்கம் உட்காரும்படிச் செய்து அவர் மடியில் குழந்தையைப் படுக்கவைத்து நாமகரணம் செய்கின்றனர். அன்று அந்த அம்சத்திலிருக்கும் எல்லாருக்கும் விருந்து நடைபெறும். விருந்துக்கு வரும் அன்பர்கள் குழந்தைக்கு அன்பளிப்பும் கொடுப்பதுண்டு. குழந்தைக்கு ஏணை கட்டும் பழக்கமுண்டு. ஆனால் எந்த மாதத்திலாவது ஏணையில் குழந்தையைப் போடுவார்கள். குழந்தை இறந்துவிட்டால் தாய்க்குப் பால் கட்டிக் கொங்கையில் வேதனை உண்டாக்கும் அல்லவா? அந்தச் சந்தர்ப்பத்தில் தாய்ப்பாலை வீணாக்காமல் மற்றக் குழந்தையின் தாய் விரும்பினால் அந்தக் குழந்தைக்குப் பாலூட்டுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

ஆண் குழந்தைகளுக்கு ஒன்பது மாதமாகும் பொழுது அவற்றின் எதிர்காலத்தை முன்னதாக அறியப் புதுமையான முறையை இந்த மலைப் பகுதி மக்கள் கையாளுகிறார்கள். அந்தக் குழந்தைகளின் முன்னால் மண்வெட்டி, கொம்பு, மண்கொத்தி, புத்தகம், இனிப்புப் பண்டம் முதலியவைகளை வைப்பார்கள். ''பையன் கொம்பைத் தொட்டால் நிச்சயம் அவன் மாடு மேய்ப்பவனாவான்; மண் கொத்தியைத் தொட்டால் அவன் விவசாயியாவான்; புத்தகத்தைத் தொட்டால் அவன் கல்வியில் சிறந்தவனாவான். இனிப்புப் பண்டத்தைத் தொட்டால் அவன் பூமிக்குப் பாரம் சோற்றுக்குத் தண்டமாகத் தின்று தின்று ஊர் சுற்றுவான்'' என்பது அவர்கள் சோதனையின் முடிவு. ஆனால் இவைகளை

எல்லாம் மிகவும் ஜாக்கிரதையாக யாருக்கும் தெரியாமல் ஒருவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குள் என்பாடு போதும் போதும் என்று ஆனது. ஏனென்றால் என்மேல் காட்டு மக்களுக்கு ஏதாவது சந்தேகமுண்டானால், பிறகு நான் அங்கே வாழ முடியாது.

மலைப் பணிக்கன்மார்களில் யாராவது இறந்தால் அவர்களுக்குப் பாடை கட்டி மயானத்தில் புதைப்பார்கள். புதைக்கும் குழியில் பிணத்தைத் தலை தெற்காக இருக்கும்படி வைத்து மல்லாக்காகப் படுக்க வைக்கின்றனர். மயானச் சடங்கில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் பண்டைக் காலத்தில் மரணமடைந்தவர்கள் உயிருடன் இருக்கும்பொழுது என்னென்ன சாமான்கள் உபயோகப்படுத்தி வந்தார்களோ அவைகளையும், அவர்கள் என்னென்ன சாமான்களை விரும்பினார்களோ அவைகளையும் ஒரு பெரிய சாலில் (பானை) வைத்துப் பிணத்துடன் அந்தச் சாலையும் புதைத்துவிடுவார்களாம். இப்படிப்பட்ட பல சால்கள், இன்று பல இடங்களில் எடுக்கப்படுகின்றன. அந்த முதுமக்கள் தாழிகளைக் கொண்டு இன்று பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்களின் விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

மரணமடைந்தவர்களுக்கு ‘பலிப் பூசை’ என்று பதினைந்தாம் நாள் கருமாதி செய்கின்றனர். மரணமடைந்தவர்களை நினைத்து, சாதம் படைத்து பிறகு ஊர் விருந்தும் நடத்துவர். அன்று சைவச் சாப்பாடுதான் சமைப்பார்கள். மனைவி இறந்துபோய்விட்டால், ‘பலிப் பூசை’ அன்று கணவன் சவரம் செய்துகொள்ள வேண்டும். ஒவ்வோர் அம்சத்திலும் பஞ்சாயத்துத் தலைவன் உண்டு. அவர் அந்த அம்சத்தில் நிகழும் குற்றங்களை விசாரிக்க வேண்டும்.

இவர்களுக்கு முக்கியமானது பயிர்த் தொழில்தான். வயலில் வேலை செய்யும்பொழுது, அரையுடையுடன்

இரண்டு கைகளையும் வீசி வேலை செய்கின்றனர். அப்படி மழைக் காலங்களில் வேலை செய்யும்பொழுது, தலையுடன் சேர்த்து அப்படியே அணிந்துக்கொள்வதற்கு வேண்டிய வகையில் ஓலைக் குடைகள் இருக்கின்றன. ஆண்களும் இதே ஓலைக் குடைத் தொப்பியை அணிந்துகொள்ளுகின்றனர். இன்னும் சிலர் ஆடுமாடுகளை மேய்க்கின்றனர். இவர்கள் நூற்றுக்கணக்கான ஆடு மாடுகள் வைத்திருந்தாலும், அவைகள் அம்சத்தில் நுழைந்து மக்களுக்குத் தொல்லை கொடுப்பதில்லை. ஆடு மாடுகள் போகும் வழியே வேறு. மக்கள் நடமாடும் வழி வேறு. நகரங்களில் கண்ட இடங்களில் ஆடு மாடுகளைக் கட்டுவதையும், மேய்ப்பதையும்போல் நாம் காட்டில் காண முடியாது. மேலும், சாணத்தை வரட்டி தட்டாமல் எருக்குழியில் சேர்த்து உரமாக்கிப் பயிர்களுக்குப் போடுகிறார்கள். காட்டில் காப்பியோ, டீயோ அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. நல்ல பசும்பாலைக் குடிக்கின்றனர். சிலர் பக்கத்திலிருக்கும் கிராமங்களுக்குச் சென்று கூலி வேலையும் செய்கின்றனர்.

இவர்கள் எல்லா வகை இறைச்சியையும் விரும்புகின்றனர். ஆயினும் நண்டு, மாடு, இவை இரண்டையும் சாப்பிடுவதில்லை. இவர்கள் இந்து தமிழர் பண்டிகைகளுடன் மலையாள இந்துப் பண்டிகைகளையும் சேர்த்துக் கொண்டாடுகிறார்கள். ‘தம்புராட்டி’ என்ற பெண் மலைத் தெய்வத்தையும் கண்ணகி தேவியையும் ‘பொட்டன் திருவடி’ என்ற ஆண் மலைத் தெய்வத்தையும் வழிபடுகின்றனர். ஆனால் எல்லாப் பெண் தெய்வத்திற்கும் ஆடு, கோழி பலி கொடுக்கின்றனர்.

இவர்கள் பேசுவது கொச்சை மலையாளம். இவர்களின் இல்லத்தில் (சாளா) வழங்கும் சாதாரணப் பொருள்களுக்கு மலையாளத்தில் சொல்லும் பெயர்கள் தமிழே.

3. வயநாடன் செட்டியார்

மைசூர்—குண்டல்பேட்டையில் சில நாட்கள் தங்கிய பின் அப்படியே கூடலூர் வழியாகச் சுல்தான்பத்திரி, புதர்க் காடு முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு வாழும் பணியர், மணி செருமர், சோழகர், மந்தாடன் செட்டியார், வய நாடன் செட்டியார் முதலியவர்களைக் காணலாமென்று புறப்பட்டேன். வழியில் கூடலூரில் வாழும் கோத்தர்கள் பாடியில் தங்கினேன். மறுநாள் பஸ்ஸில் தேவர் சோலை வரை சென்று அங்கிருந்து, புதர்க்காட்டுக்கு ஐந்து மைல் தூரம் நடந்துபோனோம். புதர்க் காட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் ''பாட்ட வயல்'' என்ற இடத்தில் வய நாடன் செட்டியார் வீடு இருக்கிறது. அந்த வீடு ப வடிவத் தில் கோரைப் புல்லால் கட்டப்பட்டிருந்தாலும் திண்ணை யுடன் இருக்கிறது; காண்பதற்கு அழகாகவும் இருக்கிறது. அந்நியர்கள் வந்தால் படுக்க, உட்கார, பேச எல்லா வசதி களையும் மரத்தாலேயே செய்திருக்கிறார்கள். வயநாடன் செட்டியார் இல்லத்தில் இரவு சாப்பாடு முடிந்ததும், எங்க ளுக்குப் படுக்கைகள் வெளியில் போடப்பட்டன.

இந்த மலை வட்டாரத்தில் கரடி, புலி முதலிய பிராணி கள் இல்லாவிட்டாலும், மணிக்குச் சுமார் எண்பது மைல் வேகத்தில் போகக்கூடிய சிறுத்தை, புலி முதலிய மிருகங்கள்

மைசூரிலிருந்து அறுபது மைல் தூரத்திலிருக்கும் இந்தப் புதர்க்காட்டுக்கு வராமலா இருக்கும்—என்று நினைக்கும் போது, வெளியில் படுத்தால் எப்படித் தூக்கம் வரும்? ஆனால் என்ன செய்வது? இவர்களுடைய சம்பிரதாயப்படி அந்நியரை வெளியில்தான் படுக்க வைப்பார்கள். மழை, பனி எந்தக் காலமாக இருந்தாலும் சரி, வெளியில்தான் படுக்க வேண்டும். செட்டியாருடைய தம்பி, தங்கைகளே வந்தாலும்கூட வெளியில்தான் படுக்க வேண்டுமாம்.

வயநாடன் செட்டியார் படுப்பதற்கு முன் துப்பாக்கி யைத் தம் படுக்கும் அறையில் தயார் செய்து வைத்துக் கொண்டார். பிறகு அந்த அறையின் பெரிய கோட்டைக் கதவு போலிருக்கும் கதவுகளை மூடிக்கொண்டார். ''வெளி யில் என்ன நடந்தாலும் இந்தச் செட்டியாருக்கு காது கேட்குமா?'' என்று நாங்கள் பேசிக்கொண்டோம். ''மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பார்கள். வெளியில் இலேசான சத்தம் கேட்டாலும் திடுக்கிட்டு விழித்துக்கொள்வேன். இரவு ஒரு மணி இருக்கும்; ''கிளிச்'' என்று ஓசை கேட்டது. 'என்ன ஓசை?' என்று மெதுவாக எழுந்து வீட்டைச் சுற்றி வந்தேன். காட்டு வண்டு களின் ஓசையையும், நரிகளின் ஊளையையும் நாய்களின் குரைப்பையும் தவிர வேறொன்றும் எங்கள் செவியில் கேட்க வில்லை. வீட்டைச் சுற்றி வரும்பொழுது, அந்தச் செட்டி யார் படுக்கும் அறைச் சுவரில் இரண்டு துவாரங்கள் இருந்த தைக் கண்டேன். ஒன்றில் வட்டமான கண்ணாடி புதைக்கப் பட்டிருந்தது. மற்றொன்று துப்பாக்கியின் அளவுக்குச் சரி யாக இருந்தது. இவை ஒன்றின்கீழ் ஒன்றாக இருந்தன. மேல் துவாரத்திலிருந்து பார்த்தால் வெளியில் என்ன நடக்கிறது என்பது நன்றாகத் தெரியும். பிராணிகள் வந்தால் உடனே வெளியில் வராமல் உள்ளிருந்தவாறே இரண்டாவது துவாரத்தின்மூலம் துப்பாக்கியால் சுடலாம் அல்லவா? ஒரு

பக்கத்தில் யானைகளுக்குப் பயம். மற்றொரு பக்கத்தில் கண் எரிச்சல். அருகில் இருந்த புதரில் இரண்டு பக்கங்களிலும், பக்கத்திற்கு இரண்டு கண்கள்போல் நான்கு கண்கள் 'பளிச் பளிச்'சென்று தெரிந்தன. உடனே கடிகாரத்தைப் பார்த்தேன். ''இரவு இரண்டரை மணி'' என்று நண்பரிடம் கூறினேன். உடனே பக்கத்திற்கு ஒருவராக 'டார்ச்சை' அடித்தோம். ஒரு பக்கத்தில் காட்டுப் பன்றியும், மற்றொரு பக்கத்தில் பெரிய நரி ஒன்றும், தம் தலையைத் தூக்கி ஒன்றை ஒன்று பார்த்துவிட்டு ஓடத்தொடங்கின. இனிமேல் என்ன நடந்தாலும் எழுந்து பார்ப்பதில்லை என்ற தீர்மானத்துடன் காலை மூன்று மணிக்குப் படுத்துக் கொண்டோம்.

காலையில் சுமார் ஐந்து மணி இருக்கும். மங்கலான ஒளியில் ஒரு பெண்மணி வெள்ளை உடையில் தேவகன்னி போல் வந்து ஓர் ஆணை மும்முறை சுற்றி, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். ஆணும் ஆகாயத்தைப் பார்த்துவிட்டுத் தன் காலைத் தொட்டு வணங்கிய அந்த எழில்மிக்க பெண்மணியை ஆதரவுடன் தூக்கி அணைத்துக்கொண்டார்.

வயநாடன் செட்டியார்கள், வாழுமிடங்களுக்கு, 'அம்சம்—அம்சம்' என்று பெயர். வயநாட்டின் சுற்றுப்புறங்களில் சுமார் அறுபது குடும்பங்கள் வாழ்கின்றன. சாதாரணமாக மற்றவர்கள் இவர்களைச், 'செட்டியாரே', என்றுதான் அழைக்கின்றனர்.

இவர்கள் மலபார், உதகை, இராமேசுவரம், பழநி முதலிய இடங்களுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுடைய ஊர்களுக்கு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையில் போகலாம். இவர்கள் குடிசைகளையும் வீடு என்றே கூறுகின்றனர். பண்டைக்காலத்தில் மண் பாண்டங்களே உப

வயநாடு செட்டியார் இனப் பெண்கள்

யோகப்படுத்தினார்களாம். இவர்களுக்குப் பண்டைக்காலம் முதல் வயல்கள் இருப்பதால் மற்றவர்களைப்போல் இவர்கள் நாடோடி வாழ்க்கையுடையவர்கள் அல்லர். வயநாடன் செட்டியார்கள் பரந்த முகமுடையவர்கள். கீழே ஒரு துண்டும் மேலே ஒரு துண்டும் அணிந்திருக்கின்றனர். ஆண்கள் காதில் சங்கு வளையமும், தோடும், பொன் மோதிரமும் காப்பும் அணிந்திருக்கின்றனர். ஆண்கள் கொண்டையை முன் நெற்றியில் போடுகிறார்கள். வயநாடன் பெண்கள் நல்ல உயரமுடையவர்கள். மிகவும் அழகுள்ள முகவடிவுடன் சிவப்பாகவும் இருக்கிறார்கள். மங்கையர்களின் உடலில் எங்கும் பச்சை குத்தக்கூடாது. பெண்கள் ஆண்களைப் போல் இடுப்பில் வேட்டி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மற்றொரு வேட்டியை வலப்பக்கத்திலிருந்து, முதுகின் பக்கம் வளைத்துப் பின் இடத் தோளின் மேல் முடி போட்டுக்

கொள்ளுகிறார்கள். இடக்கைப் பக்கம் நேராகத் திறந்திருக்கிறது பெண்கள் கோடரிக் கொண்டை போடுகிறார்கள். பெண்கள் நாள்தோறும் காலையில் குளித்துவிட்டுச் சமையல் அறையைப் பசுஞ் சாணத்தால் மெழுகியபின் சமையல் வேலையைத் தொடங்குவார்கள். இந்த மங்கையர்களின் பெயர்களைக் கவனித்தால் தமிழ்நாட்டுப் பெயர்களைப் போல் இருக்கின்றன.

வயநாடன் செட்டிப் பெண்கள் நாள்தோறும் வயலிலும் வீட்டு முற்றத்திலும் சாணத்தைத் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கின்றனர்.

குழந்தை பிறந்ததும் ஈச்சம் பாயில் படுக்க வைத்த பின்னரே அது தாயின் கையில் மருத்துவச்சியால் கொடுக்கப் படுகிறது. குழந்தைக்குக் குடும்பத்தின் பெரியவர்களின் மூலம் ஆறாவது மாதத்தில் மடியில் உட்கார வைத்து நாம கரணம் செய்கின்றனர். பெயர் வைப்பதற்காகப் பிறந்த நாளையும், நேரத்தையும் பார்த்துச் சில எழுத்துக்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். அந்த எழுத்துக்கள் குழந்தைக்கு வைக்க விரும்பும் பெயரின் நடுவிலோ தொடக்கத்திலோ வரும்படி பார்த்து வைப்பார்கள். அன்று பாயசம் மட்டும் செய்து விருந்து வைப்பார்கள்.

பதினாறாவது நாளில் குழந்தையைக் காட்டு மூங்கிலால் செய்த தொட்டிலில் படுக்க வைக்கின்றனர். ருதுவான பெண்களைத் தங்கள் பாடிக்கு வெளியில் தனிக்குகுசை கட்டி உட்கார வைக்கின்றனர். குளித்தபின், ஒருவேளை சாப்பாடு தான் கொடுப்பார்கள். மற்ற நேரங்களில் காப்பி தவிர வேறொன்றும் கொடுப்பதில்லை. இரவில் யாராவது வயதானவர்கள் ருதுவான பெண்ணுக்குத் துணையாகப் படுப்பதுண்டு. ருதுவான பெண்ணை ஏழாவது நாளில் சுமங்கலிகள் கூடிப் பாட்டுப் பாடி மஞ்சள் நீரால் குளிக்கச்

செய்து புதிய முண்டு கொடுத்து, நடுவீட்டில் உட்காரவைப் பார்கள். அன்றிரவு விருந்து உண்டு. நம்மைப்போல் பீட்டு சுற்றுவதில்லை சாதாரண நாட்களில்கூட மங்கையர்கள் மாதத்தில் ஐந்து நாட்கள் தனிமையில்தான் உட்கார வேண்டும். இதனை நல்ல பழக்கம் என்று எல்லாக் காடர் களும் அனுசரிக்கின்றனர். நல்ல நாட்களில் ஆண்கள் கூடிக் கோலாட்டம் ஆடி நடனமிடுவார்கள். ருதுவான பெண்ணை வீட்டுக்கு அழைத்துக் கொள்ளும் அன்றிரவு, "ஐவர் நாடகம்" என்று ஒரு தெருக்கூத்தை ஆண்கள் சேர்ந்து ஆடுகிறார்கள். கோயில் திருவிழாக்களில் மட்டும் மங்கையர் கள் காலில், "கண்ணகிச் சிலம்பு" என்று ஒருவிதச் சலங்கை கட்டி ஆடுகிறார்கள். காட்டிலும், மலையிலும் வாழும் இந்த அப்பாவிகளுக்குக் "கண்ணகி" பெயரும் அவள் செய்தியும் அவளை வணங்க வேண்டுமென்பதும் எப்படித் தெரியுமோ தெரியவில்லை! அதற்கு விடையும் இந்த அப்பாவிப் பெண் களுக்குத் தெரியவில்லை. இவைகளை எல்லாம் கேட்டு, அவர்கள் பின்னாலேயே நான் ஒரு சிறு பையனைப்போல் ஓடிவருவதைக் கண்டு மகிழ்வும், என்மேல் பரிவும் கொண்டு, எனக்குப் பல அன்பளிப்புகள் கொடுத்தார்கள். என்ன அன்பளிப்புகள் என்று கேட்கிறீர்களா? மூங்கிற் சாமான்கள், சங்குகள், தேன், மான் தோல் முதலியவை.

ஆண்களும் பெண்களும் நெற்றியில் சந்தனப் பொட்டு அணிகின்றனர். மற்ற ஆதிவாசிகளைப்போல் இவர்கள் உடலில் பச்சை குத்திக்கொள்வதில்லை. உடல் முழுவதும் மாசுமருவின்றி சுத்தமாகக் காணப்படுகின்றது. பண்டைக் காலத்தில் பால்ய மணம் இருந்ததாம். ஆனால் இன்று ருதுவான பின்தான் திருமணம் நடைபெறுகின்றது. திருமணத்திற்கு முன் ஆணும் பெண்ணும் பார்த்துக் கொள்ளக்கூடாது. சாதகம் பார்த்துத் திருமணம் செய்வ துண்டு. இவர்கள் முக்கியமாகப் பெண் கொள்ளுவது தாய்

மாமன் மகளைத்தான். எது காரணம் பற்றியும் அத்தை மகளைத் திருமணம் செய்யக்கூடாது. திருமணம் நிச்சய மானதும் பந்தல் போடப்படும்.

இவர்களுக்குள் பன்னிரண்டு என்ற எண் தனி மதிப் புடையது. மணப்பெண்ணை அழைத்துவர, மணமகனின் உறவினரில் பன்னிருவர் பெண்ணில்லம் செல்வர். மணப் பந்தலைப் பன்னிரண்டு கால்கள் வைத்து அமைப்பார்கள். மணமக்களின் பெற்றோர்கட்குப் பன்னிரண்டு காசுகள் கொடுத்து மாற்றிக்கொள்ளுவார்கள். பந்தலில் பன்னிரண் டாக நவதானியங்கள் பன்னிரண்டு பாத்திரங்களில் வைப் பார்கள். பந்தலில் அம்மிக்கல், பானை, குத்துவிளக்கு, தாம்பூலம் முதலிய பக்கப் பொருள்களையும் மொத்தம் பன்னிரண்டாகக் கூட்டிவைப்பார்கள். இவைகள் எல்லாம் மூப்பனின் முன்னிலையில் செய்யப்பட வேண்டும்.

திருமணச் சடங்கும் அவரேதான் செய்ய வேண்டும். ஆண்களுக்குச் சக்தி இருந்தால் இரண்டு மூன்று திருமணமும் செய்துகொள்ளலாம். மருமகன் எதிரில் மாமியார் வரக் கூடாது. மாமனார் எதிரில் மருமகள் வரக்கூடாது.

'தென்னாட்டு முகம்மதியர்களிடையே சில பிரிவினரில் பெண்ணின் கழுத்தில் மணமகன் தாலி கட்டாமல், வயதான ஒரு மங்கையே தாலிகட்டுவதைப் போல்' பொன்னால் பெண் வீட்டார், சிறுவயதில் செய்த மாங்கல்யத்தை மணப்பந்தலி லிருக்கும் வயதானவரின் கையில் மூப்பன் கொடுக்க அதை அவர் வயதான ஒரு சுமங்கலியிடம் கொடுத்து மணப் பெண்ணின் கழுத்தில் கட்டச் செய்வார். தாலி சந்திரன் போன்ற வடிவமுடையது. திருமணத்தில் கட்டிய தாலியை நான் ஒரு மங்கையினிடம் பார்த்தேன். அதே தாலியைப் போன்ற வடிவமுள்ள நகை எல்லாப் பெண் குழந்தைகளின்

கழுத்திலும் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் அந்த மங்கையைக் கேட்டேன். அதற்கவள் என்ன கூறினாள் தெரியுமா?

''இந்தத் தாலிகூட நான் குழந்தைப் பருவம் முதல் அணிந்துகொண்டு இருப்பதுதான். இதையே என் திருமணத் தில் கட்டிவிட்டார்கள். எங்கள் இனத்தில் சிறுவயது முதல், ''தாலி'' என்ற ஒரு நகையை பெண், ஆண் இருவகைக் குழந் தைகளுக்கும் கட்டுவார்கள். பண்டைக் காலத்தில் எங்கள் இனத்திலே தாலியே கிடையாது. மணமகன், மணப் பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு பெரியவர்களை வணங்கிவிட்டு, அவளை ஒரு குடிசைக்குள் அழைத்துச் செல்லுவான். அதுவே திருமணம்தான். ஆனால் தற்காலத் தில் நான்குபேர் கட்டுகிறார்கள், கேட்கிறார்கள். அதற்காக நாங்களும் திருமணத்தில் பழைய தாலி நகையை மறுபடியும் புதுப்பித்துக் கட்டிக்கொள்ளுகிறோம்.

பண்டைக் காலத்தில் கேரள நாட்டிலும், இந் நீலகிரி மலைப் பிராந்தியத்திலும் தாலியே கிடையாது. தீயை எரிய விட்டுத் திருமணம் செய்வார்கள் என்று அந்த வயநாடன் செட்டி மங்கை கூறியதைக் கேட்டதும் என் சிந்தனை சங்ககால நூல்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது. உடனே பல சிறுமிகளின் கழுத்துக்களிலிருக்கும் தாலி நகையைப் பார்வையிட்டேன். சில வட்டமாகவும், சில பொட்டுத் தாலியாகவும், சில பெட்டியாகவும், சில புலி, மனிதர் பற்களைப் போலவும் இருப்பதைக் கண்டேன்.

''அந்த நகையின் பெயர் தாலிதான். மற்ற நகைகளின் பெயரைப் போலவே 'தாலி' என்பதும் ஒரு நகை'' என்று எடுத்துக் கூறினாள் அந்த மங்கை.

165644

இவர்கள் கூறியதைக் கேட்டதும் சங்ககால முதல் கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரையில் இந்தியாவில் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மேலும் காட்டிலும் காடச்சிகளில் சில இன மக்களில் கழுத்தில் புலிப் பல்லையே தாலியாக அணிந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் காடன் திருமணம் செய்வதற்கு முன், தன் காதலிக்கு கொடுத்த வெகுமதியாம். கடைசியில் அவளிடமே அவன் நெருங்கிப் பழகித் திருமணமும் செய்துகொள்கிறான்.

''கைப்பிடித்தல்'' அல்லது ''பாணிக்கிரகணம்'' ஒன்றே திருமணத்கில் நடைபெறும். சடங்குகளில் முக்கிய மானது—என்று பண்டைக்கால மூதாதையர்கள் கூறி யுள்ளார்கள்.

ஆதிகாலம் முதல் திருமணத்தில் ஒரேவிதமான தாலிச் சடங்கு இருக்குமேயானால், தற்காலத்தில் சிலருக்கு நெற்றியிலும், சிலருக்கு காதிலும் சிலருக்குத் தலையிலும், சிலருக்கு மார்பிலும், சிலருக்குக் கழுத்திலும், சிலருக்கு விரலிலும் விதம் விதமான தாலிகளும், பொன்னுக்குப் பதிலாக மணியும், சங்கும், பவழமும் ''தாலி'' என்ற பெயரில் நகைகளும் இருக்குமா?

பண்டை வேதங்களிலும், சங்ககால நூல்களிலும் வரும் பத்தினியர்களின் திருமணங்களில் எல்லாம் தாலி கட்டியதைப்பற்றிய செய்தி வரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

மேலும், கலிங்கத்துப் பரணியின்படி கி. பி. பதினோராம் நூற்றாண்டில் முதற் குலோத்துங்க சோழன் சோழர் குலம் சாளுக்கியர் குலம் என்னும் இருவகைக் குலங்களிலும் திருமணத்தில் சாலச் சிறந்ததாக இருந்தது 'கைப்பிடித்தல்' என்பதே. இதை,

Y567.212

"அருமறையின் நெறி காட்ட அயன் பயந்த
நிலமகளை அண்டம் காக்கும்.
உரிமை யினிற் கைப் பிடித்த உபய
குலோத்தமன் அபயன் வாழ்க என்றே"

என்று விளக்கினார் சயங்கொண்டார்.

பண்டைக் காலத்தில் ஆண் மணக் கோலத்துடன், மணப் பெண்ணின் கைப்பிடித்தால் அப்பொழுதே அவர்கள் தம்பதிகள் எனப்பட்டனர்.

மேலும், கிறிஸ்தவர்களுடைய வேத நூலின் பழைய ஏற்பாட்டில் திருமணம் என்று கூறாமல் "மனைவியாகத் தேர்ந்தெடுத்தான்", "மனைவியாகக் கொண்டு கூடி வாழ்ந்தான்" என்றே கூறப்படுகிறது.

"தாலி கட்டினான்" என்ற சொல் வரவில்லை. இன்றும் மாதா கோவிலில் குருவானவர் ஜெபம் செய்த பின் "மணமக்கள் ஒப்புதல் வாக்கு" கொடுத்தபோதே அது திருமணமாகக் கருதப்படுகிறது. அதுதான் தாலி. 'பொன் தாலி' கட்டுவது உலக வாழ்க்கைக்கு மக்கள் தெரிந்து கொள்ள ஓர் அடையாளமே ஆகும். கேரள நாட்டில் பல ஆதிவாசிகள் வாழும் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்தேன். அங்குத் திருமணத்தில் தாலி கட்டும் பழக்கமே கிடையாதாம். இது நானே நேரில் கண்டதோர் செய்தி.

இன்றும் 'தாலி' என்பதே தெரியாத பல அம்சங்கள் (கிராமங்கள்) இருக்கின்றன.

தற்காலத்தில் இந்த இடத்திலும் காதல் திருமணங்கள் நடைபெறுகின்றன; சில நகைகளும் போடுகிறார்கள். மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு ரூ 7.50 கொடுக்க வேண்டும். இது சம்பந்தத்தைக் காட்டுகிறது.

குறைந்த செலவில் விதவைகள் திருமணம் செய்துகொள்ள லாம். ஆனால் மாலை மாற்றிக்கொள்ளக்கூடாது. திலகம் உண்டு. பண்டைக் காலத்தில் இரவில்தான் விதவை களுக்குத் திருமணம் நடைபெறும். இன்று பகலில் நடைபெறு கிறது. விதவைக்குத் திருமணம் ஆகாமல் இருந்தாலும், அவள் கழுத்தில் தாலி உண்டு. காரணம் விதவையின் கழுத்தில் இருப்பது திருமணத்தில் கணவன் கட்டிய தாலி இல்லை அல்லவா? அது சிறுவயது முதல் கழுத்தில் இருக்கும் தாலி. ஆகையால் விதவையின் கழுத்தில் அவள் சாகும் வரையில் தாலி இருக்கும். பெண்கள் மகப்பேறுக் காலத்தை அடைந்ததும் ஏழாம் மாதம் தாயகம் செல்லுகிறார்கள். சாதாரணமாக எல்லாப் பெண்களும் மருத்துவம் தெரிந்து வைத்திருக்கின்றனர். பேறுகாலத்தில் வீட்டின் அருகில் தனிக்குடிசையில் மருத்துவம் கவனிக்கப்படுகிறது. குழந்தைப் பேறு காலத்தில் தாய் உட்கார்ந்த நிலையில், உயரத்தி லிருக்கும் வளைந்த கயிற்றை இரு கைகளாலும் பிடித்துக் கொள்ளுவாளாம்.

குழந்தை பிறந்து பதினைந்து நாட்கள் வரையில் சுக்கு, குருமிளகு—கஷாயமிட்டுச் சாப்பிடுவாள். மகப்பேறு கஷ்ட மாக இருந்தால் அந்த மலை வட்டாரத்தில் வாழும் காட்டுப் பணியர்களைக் கூப்பிட்டு மருத்துவம் பார்ப்பார்கள். பிரசவ மான அறையிலேயே பெரும்பாலான வயநாடன் செட்டிப் பெண்கள் தங்கள் குழந்தைகளின் நஞ்சுக்கொடியைப் புதைத்துவிடுவார்கள். குழந்தைக்கு எப்போதாவது வியாதி ஏற்படுமானால், தாயானவள் நஞ்சுக் கொடி புதைக்கப்பட்ட தரையின் மேல் மூன்று தட்டுகள் தட்டியபின், அந்த இடத்தி லேயே குழந்தையைப் படுக்க வைத்து எடுப்பாள். இவ்வாறு செய்தால் குழந்தை சுகமாக வாழும் என்பது அவர்களின் நம்பிக்கை. பிரசவித்தவள் பதினைந்து நாட்கள் தனிக்

குடிசையில் இருக்கவேண்டும். பிறகு குளித்துவிட்டு வீட்டு வேலைகள் செய்தாலும், மூன்று மாதம் வரையில் பிரசவத் தீட்டு என்று கருதிக் கோயிலுக்குப் போவதில்லை.

மரணமடையும் தறுவாயிலிருந்தால், பெண், பணம், பால், பழநித் தீர்த்தம், அரிசி, துளசி முதலியவைகளைக் கொடுப்பதுண்டு. மரணமடைந்தபின் ஒருநாள்தான் வைத்திருப்பார்கள். பிணத்தைச் சாதாரணமாய்ச் சுடுவது தான் வழக்கம். ஆனால், கடும் மழை பெய்தால் பாடையுடன் புதைத்து விடுவார்கள். பிணத்தைத் தூக்கிச் செல்லும் பொழுது வெள்ளைத் துணியால் பிணம் முழுவதும் மூடி, வயிற்றின்மேல் ஒரு பெரிய தட்டில், மார்வார்நாட்டு மக்களைப் போல் உப்பு, பூ, தாம்பூலம், காசு, பொன், அவர்கள் விரும்பிச் சாப்பிட்ட பல வகையான தின்பண்டங்கள் முதலியவைகளை வைத்து மயானத்திற்குக் கொண்டு போவார்கள். இதன் கருத்து உலகில் எல்லா ஆசைகளையும் விட்டு விட்டு ஆண்டவன்மேல் நினைவாக இருக்கவேண்டும் என்பதாம். பிணத்தை எரித்தால் ஏழு அல்லது பதினாறாம் நாளில் எரிந்த சாம்பலை மறுபடியும் புதைப்பார்கள். மயாானத்திற்குப் பெண்கள் போகக்கூடாது. கணவன் இறந்தபின் மூன்றாம் நாள் முதல் எட்டு நாட்கள் வரையில் ஏழு பெண்களும் நான்கு ஆண்களும் சேர்ந்து சாப்பிடுவதற்கு முன் பிடிச்சோற்றை காகத்திற்குப் போட வேண்டும். மருமகன் மாமனாருக்கும், மருமகள் மாமியாருக்கும் கருமாதிச் செலவு செய்ய வேண்டும். இழவு வீட்டார் பதினோறாம் நாளிலிருந்து பத்து நாட்கள் வரையில் கோயில் பிரார்த்தனையும் பால் பூசையும் சர்க்கரை பழம் உள்ள விருந்தும் செய்ய வேண்டும்; கருமாதிச் சமையலும் கோவிலில்தான் செய்யவேண்டும், ஆனால் திருமணமாகாத ருதுவான பெண்ணை மயானத்தில் சுடுவார்கள். மனைவி இறந்தால் கணவன் சவரம் செய்துகொள்ள வேண்டும்.

தகப்பனார் இறந்தால் மூத்த மகன் சவரம் செய்துகொண்டு கொள்ளி வைக்க வேண்டும். பஞ்சாயத்து மூலம் எல்லா விவகாரங்களையும் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். நம்மைப் போல் கோர்ட்டுக்குப் போவதில்லை.

வயநாடன் செட்டியார்களுக்குப் பயிர்த் தொழில்தான் முக்கியமானது. ஆனால் சிலர் நல்ல வேட்டைக்காரர்களாக இருப்பதால், பண்டைக் காலத்தில் சில அரசர்களுக்குச் சிக்காரிகளாகவுமிருந்தார்களாம். ஆகையால் இன்றும் பலரிடம் துப்பாக்கிகள் இருக்கின்றன. சாதாரணமாகப் பெண்களில் சிலர் வயலில் வேலை செய்தாலும் வீட்டு வேலைகள் முழுவதையும் தாங்களே கவனிக்கின்றனர். நெல் சுத்தம், பசும்பால் கறப்பது, சமையல் வேலை, இறைச்சிகள் பதம் செய்வது, பழங்களையும், காய்களையும் குத்தகைக்கு விடுவது முதலிய சகல வேலைகளையும் பெண்களே கவனிக்கின்றனர். வீட்டில் சில பெண்கள் வலைகட்டி, சில காட்டுப் பறவைகளையும் பிடிக்கின்றனர். நாள்தோறும் கிடைக்கும் பொருள்களில் பெண்கள் கொஞ்சம் சேமித்து வைக்கின்றனர். பன்றி, மாடு, எருமை முதலியவைகளைத் தவிர மற்ற மாமிசங்களைச் சாப்பிடுவார்கள்.

இவர்கள் கோவிலை மாடம் என்று கூறுகின்றனர். கோயில் சடங்குகளை மூப்பன்தான் கவனிக்க வேண்டும். இவர்கள் சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களுடன் தம்பிராட்டி, பனை உண்ணன், மேலோத் தலச்சன், காளிமல, மம்மதம், பூதாடி, முதலிய குட்டி தேவதைகளையும் வழிபடுகிறார்கள். அந்தத் தெய்வங்களுக்குத் தலைவாழை இலையில் இறைச்சியில்லாமல் உணவு படைப்பார்கள். பெண்கள் கோவிலுக்குள் போகக்கூடாது. சித்திரை மாதம் முதல் தேதியில் எல்லாக் கோவில்களிலும் பூசை செய்து திருவிழாக்கள் நடைபெறும்.

இவர்களுக்குப் பேய், பிசாசு, மந்திரம் முதலியவைகளில் நம்பிக்கை இல்லை. இவர்கள் கன்னடமும், மலையாளமும் கலந்து பேசுகிறார்கள். வயநாடன் செட்டி, மந்தாடன் செட்டி, எரநாடன் செட்டி இந்த மூன்று செட்டிமார்களும் பேசுவது ஒரே விதமான தனித்த மலையாளப் பேச்சு என்று கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் பேசும் மலையாளம் விளங்குவது கடினம். இவர்கள் கோட்டயம் இராசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய தோற்றங்களையும் பழக்கவழக்கங்களையும் பெண்களின் அழகையும் கவனித்தால் இவர்கள் சில அரசர்களின் கொடுங்கோலுக்கு அஞ்சி மைசூரிலிருந்தும், கூர்கு நாட்டிலிருந்தும் வயநாட்டுப் பகுதிகளுக்கும் நீலகிரிப் பகுதிகளுக்கும் பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளிலும் சென்றவர்களாக இருக்க வேண்டும்.

எனவே, இவர்கள் ஆதியில் கன்னட தேசத்தவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுவதில் தவறில்லை. மேலும், மானிட இயல் ஆராய்ச்சி செய்வதற்கு இந்த மலை வட்டாரத்தில் வாழும் மக்கள் மிக முக்கியமானவர்கள்.

4. வேட்டையாடும் நாயாடிகள்

நாயாடிகள் வாழும் இடத்தை 'அம்சம்' என்று கூறு கிறார்கள். இன்று சிலர் ஊருக்குள்ளேயே வாழ்கிறார்கள். அடர்ந்த மலைக் காட்டில் பிற மக்களின் கண்ணில் படாமல் மறைந்தே பல நூற்றாண்டுகள் வரையில் முன்நாளில் இவர் கள் வாழ்ந்தார்களாம்; சமீப காலத்தில்தான் மக்களுடன் மக்களாய்க் கலந்து வாழத் தொடங்கினார்களாம். பல நாயாடிகளின் குடிசைகளுக்குள் புகுந்து பார்த்தேன். கந்தைப் பாயும் ஓட்டைப் பானைகளும் தவிர வேறு ஒரு பொருளும் அவற்றில் இல்லை. சில நாயாடிகள் தங்கள் குடிசைகளை மலையின் உச்சியிலும் சோலையிலும் ஓடையின் அருகிலும் களிமண்ணால் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். இவர்களை 'மணிச்சியர்' என்றும், 'மலயன்' என்றும் சிலர் குறிப்பிடு கிறார்கள்.

ஆண்கள் பரட்டைத் தலையுடன் அழுக்கு வேட்டி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தாடியும் மீசையும் சிலர் வளர்க்கிறார்கள். காதில் வெள்ளிக் கடுக்கனோ வளையமோ அணிந்துகொண்டிருக்கிறார்கள்.

நாயாடிச்சிகளும் வேட்டியே அணிகிறார்கள். பரட்டைத் தலை, காதில் பனை ஓலைச் சுருளை அணிந்துகொண்டிருக்

கிறார்கள். சில பெண்கள் இன்று ரவிக்கை அணிந்தாலும் பெரும்பாலான பெண்கள் முண்டுடன்தான் இருக்கிறார்கள். பெண்கள் எல்லாருமே வெள்ளி மூக்குத்தி அணிந்திருக்கிறார்கள். கழுத்தில் வெள்ளிச் சங்கிலியை ஒட்ட அணிந்திருக்கிறார்கள். பெரிய பெண்ணை 'நாயாடிச்சி' என்றும், இளம் பெண்ணை 'மொலாயம்' என்றும், சிறுமியை 'மணிச்சி' என்றும் குறிக்கிறார்கள்.

ஆண்களும் பெண்களும் 'கோடரி முடிச்சு'க் கொண்டை போடுகிறார்கள். குழந்தை பிறந்ததும் முதலில் பாக்கு மட்டையில்தான் படுக்க வைக்கிறார்கள்.

நாயாடிப் பெண் ருதுவானால், ஓடும் ஆற்றில் அவளைக் குளிக்க வைப்பார்கள். ருதுவான பெண் சில நாள் வரையில் தனிக்குடிசையில் இருக்க வேண்டும். எதையும் தொடக் கூடாது. தன் கையால் தன் தலையைக்கூடத் தொடக் கூடாது. உடம்பைச் சொரிவதானாலும் ஒரு குச்சியால்தான் சொரிந்துகொள்ள வேண்டும். ஆனால் சாதாரணமாய் வீட்டுக்கு விலக்கான பெண், காலையில் குளித்த பின் வேலைக்குப் போய்விடுவாள்.

உயர்ந்த வகுப்பார்களிடம் வந்து பிடிவாதமாகத் தர்மம் கேட்டு நாயாடிகள் வாங்கிக்கொள்வார்கள். மனம் இறங்கித் தர்மம் செய்கிறார்கள். தாங்கள் கொடுப்பதைத் தரையில் வைத்து சிறிது தூரம் சென்ற பிறகுதான், நாயாடிகள் மரியாதையாக வந்து அதை எடுத்துக்கொள்ளுவார்கள். இந்தப் பழக்கம் இப்போது பெரிதும் குறைந்திருக்கிறது.

நாயாடிகளுக்குள் யார் என்ன வேலை செய்தாலும் எல்லாரும் 'ஒரே இன மக்கள்'; தங்களுக்குள் வித்தியாசம் இல்லாமல் பெண் கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளுவார்கள். பெண்ணுக்கு ருதுவான பின் மணம் செய்து வைக்கிறார்கள்.

நாயாடிகளுக்குள் விசித்திரமான ஒரு சுயம்வரம் நடக்கிறது. ஒரு புதிய குடிசை கட்டி, அதில் சுயம்வரப் பெண்ணைத் தனியே வைப்பார்கள். பிறகு அந்தப் பாடியைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அந்தக் குடிசையைச் சூழ்ந்து கொள்ளுவார்கள். பெண்ணின் தந்தையோ உறவினர்களில் ஒருவனோ குடிசைக்கருகில் அமர்ந்துகொண்டு மேளம் அடித்துப் பாட்டுப் பாடுவான். மணமாகாத பல வாலிபர்கள் ஆளுக்கு ஒரு குச்சியைக் கையில் எடுத்துக்கொண்டு உடனே வந்து சேருவார்கள். அந்தக் குடிசையைச் சுற்றி சுமார் ஒரு மணி நேரம் பாட்டுக்கு ஏற்றபடி ஆடுவார்கள். ஒன்றிரண்டு பாட்டு முடிந்ததும் எல்லா வாலிபர்களும் தங்கள் கைக்குச்சிகளைக் குடிசைமீது செருகுவார்கள். குடிசைக்குள்ளே இருக்கும் பெண் தன் குலதெய்வத்தை எண்ணியபடி, அந்தக் குச்சிகளில் ஒன்றை இழுத்துக்கொள்ளுவாள். அந்தக் குச்சியுடன் குடிசைக்குள்ளிருந்து வெளியில் வருவாள். குச்சி யாருடையதோ அந்த வாலிபனையே அவள் மணந்துகொள்ள வேண்டும்.

நாயாடிகளுக்குள் பால்ய விவாகமும் காதல் மணமும் முன்நாளில் இல்லை. இன்று அங்கும் இங்கும் சில நடைபெறுகின்றன.

விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாம். விவாகவிலக்கு உண்டு.

மனைவிக்குப் பிரசவவேதனை ஏற்படும்போது அவளைத் தனிக் குடிசைக்குக் கணவன் அழைத்துச் செல்லுகிறான். அந்தக் குடிசையில் மனைவி வேதனைப்படும்போது, அவளருகில் அவனும் நின்றுகொண்டு தன் வயிற்றைப் பிடித்துப் பிசைந்துகொண்டிருப்பானாம். கணவன் இப்படிச் செய்வதால் மனைவியின் வேதனையைக் கடவுள் இவனுக்குப் பகிர்ந்து கொடுப்பார் என்பது நாயாடிகளின் நம்பிக்கை.

'குறத்தி பிள்ளை பெற்றாளாம்: குறவன் பெருங்காயம் தின்றானாம்' என்ற தமிழ்ப் பழமொழி இதனால்தான் எழுந்ததோ என்னவோ!

நாயாடிகள் மரணம் அடைந்தால், பிணத்தைச் சிலர் புதைக்கிறார்கள்; சிலர் எரிக்கிறார்கள்.

நாயாடிகள் முன் காலத்தில் வில் வேடர்களாக இருந்தார்கள். எனவே, யார் வேட்டைக்குப் போனாலும் சரி, ஷிகாரிகளாக இவர்களைத்தான் அழைத்துப் போவார்கள். ஆனால் இன்று காட்டு இலாகாவின் சட்டங்கள் இருப்பதால், இவர்களுடைய வேட்டைப் பயிற்சி குறைந்துவிட்டது.

நாயாடிகள் இந்த நாளில் தேன், மட்டிப்பால், மரத்திலிருந்து பிசின் இவை எடுக்கிறார்கள்; யானைகளைப் பழக்குகிறார்கள்; அரக்கும் மெழுகும் சேகரிக்கிறார்கள்; குடிசைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். சிலர் கொஞ்சம் கல்வி கற்று அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுகிறார்கள். தோட்ட வேலையும் பயிர்த் தொழிலும் புரிகிறவரும் உண்டு.

ஒருவிதக் காட்டு நாரைக் கொண்டு கயிறு திரித்து அதை நம்பூதிரிகளுக்கும் நாயர்களுக்கும் விற்கும் பழக்கமும் இவர்களுக்கு உண்டு. வயல் எலி பிடிப்பதிலும் இவர்கள் சமர்த்தர்கள். கவைக் கொம்புகளைக் கொண்டு பாம்பைப் பிடித்து விற்பனை செய்யும் வழக்கம் எல்லா நாயாடிகளுக்குமே உண்டு.

மல்லன், மலைவாழி, பறக்குட்டி, மாடன், மருதன், முத்துவீராயி, வெள்ளாஞ் சேரி, இப்படிப்பட்ட பல குலதெய்வங்களை நாயாடிகள் வணங்குகிறார்கள்.

முன் காலத்தில் சிக்கிமுக்கிக் கல்லைக்கொண்டு நெருப்பு உண்டாக்கி வந்தார்கள். எனவே இன்றும் தேவி பூஜைக்கு மட்டும் சிக்கிமுக்கிக் கல்லைக்கொண்டே நாயாடிகள் தீ உண்டாக்குகிறார்கள். மலையாள நாட்டில் கொண்டாடும் எல்லாத் திருவிழாக்களையும் இவர்களும் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு நாயாடியும் ஓணம் பண்டிகைக்காக நம்பூதிரி இல்லத்துக்கு எட்டுக் கஜமுள்ள கயிறும், நாயர் இல்லத்துக்கு இரண்டு கஜமுள்ள கயிறும் கொடுக்க வேண்டும். இந்தப் பழக்கம் இன்றும் சில இடங்களில் இருந்து வருகிறது.

நம்பூதிரிகளுக்காவது நாயர்களுக்காவது நோய் வந்தால், கருப்புக் கம்பளி ஒன்றின் நான்கு மூலைகளிலும் கடுகு, இஞ்சி, மஞ்சள், தாம்பூலம், தேங்காய் இவற்றை வைத்துக் கட்டி, நோயாளியை மூன்று முறை சுற்றி, பிறகு அதையும் ஓலைக் குடை, தடி, வெள்ளரிக்காய் இவற்றையும் ஒரு நாயாடிக்கு வெகுமதியாகக் கொடுப்பார்கள். இதற்கு மலையாளத்தில், 'கால தானம்' என்று பெயர். இது எமனுக்குக் கொடுக்கும் தானமாம். இந்தத் தானத்தைச் செய்தால், நோயாளியை எமன் விட்டுவிட்டுப் போய் விடுவான் என்று நினைக்கிறார்கள்.

5. கேரள நாட்டு மலையாளிகள்

ஆண்பாற் பெயர்கள்

1.	கண்டன்	11.	செல்லப்பன்*
2.	குஞ்சன்	12.	மணியன்*
3.	ராமன்*	13.	ராகவன்*
4.	குப்பன்*	14.	வேலாயுதன்*
5.	சாமி*	15.	சங்குண்ணி
6.	கோபாலன்*	16.	கோப்புண்ணி
7.	அப்பு	17.	சிப்பன்
8.	சாப்புண்ணி	18.	மாணிக்கம்*
9.	குட்டன்	19.	சிப்புக்குட்டி
10.	பங்குண்ணி	20.	கோவிந்தன்*

மேற்குறித்த சில பெயர்களோடு ''குட்டி'' என்ற அடைமொழி சேர்த்து, அப்புக்குட்டி, சிப்புக்குட்டி, கோவிந்தன்குட்டி, வேலாயுதன்குட்டி எனவும் கடை குறைத்து ''குட்டன்'' என்பது ''குட்டு'' எனவும்; 'வேலாயுதன்' என்பது 'வேலு' எனவும் 'சங்குண்ணி' என்பது 'சங்கு' எனவும் 'சிப்பன்' என்பது 'சிப்பு' எனவும் வழங்கப் பெறும்.

---

*இக்குறிகள் இடப்பட்டுள்ளவை தமிழ்நாட்டில் வழங்கப் படும் பெயர்கள்.

பெண்பாற் பெயர்கள்

1.	கல்யாணி*	11.	தேவகி*
2.	குஞ்சுகுட்டி	12.	குஞ்சம்மா*
3.	மீனாட்சி*	13.	தத்தா
4.	பாருக்குட்டி	14.	பார்வதி*
5.	சீதா*	15.	கார்த்தியாயனி
6.	கமலம்*	16.	மாதவி*
7.	அம்மிணி	17.	நீலு
8.	அம்முக்குட்டி	18.	அம்மாளு
9.	செல்லம்மாள்*	19.	சின்னு
10.	ருக்மணி*	20.	தேவு

இங்ஙனமே பெண்பாற் பெயர்களோடு, வாரியர் சமூகத்தினர் வாரஸ்யார் எனவும்;

நம்பூதிரி சமூகத்தினர், ''அந்தர் ஜனம்'' எனவும் சேர்த்து வழங்குவார்கள். கீழினத்தோர் என மதிக்கப்பட்டு வந்தவர்களிடையே இங்ஙனம் இனப்பெயர் சேர்த்து வழங்கும் வழக்கம் இல்லை. தற்காலத்தில் எல்லா வகுப்பினரும் இதைப் பெரும்பான்மையும் விட்டொழித்து வருகிறார்கள்.

---

*இக்குறிகள் இடப்பட்டுள்ளவை தமிழ்நாட்டுப் பெயர்கள். இப்பெண்பாற் பெயர்கள் பலவற்றோடு ''அம்மா'' என்ற அடைமொழி சேர்த்து வழங்கவும் பெறும். மேலும், மேற்குறித்த இருபாற் பெயர்களோடும் இந்துமதப் பாகுபாடுகளான, ''நாயர், வாரியர், பணிக்கர், மன்னாடியார்'' முதலிய சாதிப் பெயர்கள் சேர்த்தும் வழங்கப்பெறும். 'மேனவன் பிள்ளை' என்பனவும், நாயர் சமூகத்தினர் வழங்கும் பெயர்களே.

6. மலையாள மொழியில் பிறமொழிச் சொற்கள்

மலையாள மொழியில் கலந்து வரும் பிறமொழிச் சொற்களை என் குறிப்பேட்டிலிருந்து எடுத்து எழுதினால் ஆயிரம் சொற்களைக்கூட எழுதலாம். ஆனால் அங்ஙனம் எழுதினால் இந்த நூல் ஒரு சொல்லகராதியாகவே முடியும். ஏதோ பாமர மக்கள் சிறிதளவு தெரிந்துகொள்ள வேண்டும் என்று சில சொற்களை எடுத்து எழுதினேன்.

கேரள நாட்டு ஆதிவாசிகளின் இல்லங்களில் வழங்கும் சாதாரணப் பொருள்களுக்கு மலையாளத்தில் சொல்லும் பெயர்கள் தமிழ்.

கேரள ஆதிவாசிகள் கூறும் சில தமிழ்ச் சொற்கள்

1. அடி
2. அம்மை
3. அப்பன்
4. அடுப்பு
5. அம்பு
6. அம்மி
7. ஆட்டு
8. ஆடு
9. ஆப்பு
10. ஆண்
11. இடி
12. இருட்டு

13. இரும்பு
14. ஈக்கோளி
15. உரல்
16. ஊது
17. எச்சில்
18. எலி
19. பெண்
20. மக்கள்
21. வீடு
22. சோறு
23. காற்று
24. மழை
25. கார்
26. நாய்
27. கிளி
28. எறும்பு
29. ஏணி
30. தொட்டில்
31. கத்தி
32. கரடி
33. கழுத்து
34. கறுப்பு (நிறம்)
35. கருப்பு (பஞ்சம்)
36. காய்
37. கிண்ணம்
38. கிழவன்
39. கீரி
40. கிள்ளு
41. குடல்
42. வாழை
43. மா
44. குடிசை
45. குடுமி
46. குட்டி
47. கூடு
48. கூட்டம்
49. கூலி
50. கை
51. கொட்டை
52. கொண்டை
53. சக்கரம்
54. சந்தனம்
55. சரி
56. சாராயம்
57. தாக்கோல்
58. சிரி
59. சுருட்டு
60. செடி
61. செவிடு
62. சோளம்
63. வெள்ளம்
64. தயிர்
65. தலைக்கட்டு
66. தாலி
67. திருடன்
68. கள்ளன்
69. தீ
70. தீனி
71. துணி
72. துப்பு

73. தேங்காய்
74. தேளு
75. தேன்
76. தொடு
77. தோட்டம்
78. நக்கல்
79. நண்டு
80. நரி (அல்லது) குர்க்கன்
81. நாவு
82. நீ
83. தரை

முதலிய எண்ணிறந்த தமிழ்ச்சொற்கள் மலையாளத்தில் வேற்றுமையின்றி உபயோகிக்கப்படுகின்றன.

இந்த 'வட சொற்கள்' எல்லாம் மலையாள ஆதிவாசிகளின் மொழியில் கலந்திருப்பதாகக் கொள்ளவேண்டும்.

1. இருதயம் அல்லது இர்தயம்
2. தானம்
3. சத்தியம்
4. சகாயம்
5. ராஜ்யம்
6. தெய்வம்
7. கதா
8. கர்ப்பம்
9. சப்தம்
10. சகோதரன்
11. சகோதரி
12. சாதி
13. சீக்கிரம்
14. சுகம்
15. சூரியன்
16. தாகம்
17. துவாரம்
18. தூரம்
19. தைரியம்
20. தைலம்
21. நகம்

இவைகள், அவர்கள் தமிழ்ச் சொற்களுக்குக் கூறும் மலையாள சொற்கள்:

1. ஆண்—ஆணு
2. ஆனைக்கால்—ஆனக் கால்
3. இருதயம்—இர்தயம்
4. குழல்—ஊதுகுழல்
5. கண்—கண்ணு

6. கதை—கதா
7. கறி—இறைச்சி
8. கழுதை—கழுதா
9. கன்றுக்குட்டி—பசுக் குட்டி (அ) கன்னு கிடாவு
10. காக்கை—காக்கா
11. கிளை—கொம்பு
12. கூச்சல்—சப்தம்
13. கோடரி—கோடாளி
14. கோவணம்-கோணகம்
15. நூறு—சுண்ணாம்பு
16. செருப்பு—ஷெருப்பு
17. தும்மல்—தும்பல்
18. துளி—துள்ளி
19. தூண்—தூணு
20. நாய்—பட்டி
21. நிலா—நிலாவு

7. மலையாள சொற்கள் 'தெலுங்கு மொழியில்' கொடுக்கும் பொருள்கள்

சாதாரண தமிழ் சொற்கள்	ஆதிவாசிகள் கூறும் மலையாள சொற்கள்	தெலுங்கு மொழியில் கொடுக்கும் பொருள்
1. உண்ணி	1. உண்ணி	1. கம்பளம்
2. கம்மல்	2. கம்மல்	2. 'கம்மலூர்' இனமக்கள்
3. கல்	3. கல்	3. 'கள்ளு' என்பர்
4. காது	4. காது	4. ஆகாது
5. குடி	5. குடி	5. வலப்பக்கம் (அ) வயிறு
6. கோழி	6. கோழி	6. கோடி
7. நூறு	7. சுண்ணாம்பு	7. சுண்ணாம்பு அரைத்தல்
8. செருப்பு	8. ஷெருப்பு	8. தீமை
9. தாடி	9. தாடி	9. படையெடுப்பு
10. நாய்	10. பட்டி	10. 'பட்டி' குழந்தை என்பது பொருள்

இந்த மலையாள ஆதிவாசிகள் கூறும் சொற்களுக்கு **உருது மொழியில்** கொடுக்கும் பொருள்கள்:

1.	நூறு	உருது மொழியில்	'நூறு'
2.	தாடி	,,	'தாடி'
3.	நிலா	,,	நீலவர்ணம்

இந்த மலையாள ஆதிவாசிகள் வழக்கில் **கூறும் 'உருது' மொழிகள்:**

1.	சவாரி	உருது மொழியில்	''சவாரி''
2.	சாவி	,,	''சாவி''
3.	துப்பட்டி	,,	''துப்டா'' (திரிபு)

இந்த மலையாள ஆதிவாசிகள் வழக்கில் **கூறும் 'போர்ச்சுகல்'** மொழிகள்:

1. சன்னல்
2. சாவி

8. மலையாளக் கிழமைகளும் மாதங்களும்

A கேரள நாட்டில் வழங்கும் மலையாளக் கிழமைகள்

1. ஞாயர் (ஞாயிறு)
2. திங்கள்
3. செவ்வா (செவ்வாய்)
4. புதன்
5. வியாழம் (வியாழன்)
6. வெள்ளி
7. சனி

B கேரள நாட்டில் வழங்கும் மலையாள **மாதங்கள்:**

1. சிங்கம் (ஆவணி)
2. கன்னி
3. துலாம்
4. விருச்சிகம்
5. தனு
6. மகரம்
7. கும்பம்
8. மீனம்
9. மேடம்
10. இடவம்
11. மிதுனம்
12. கர்க்கிடகம்

இந்த மாதங்கள் எல்லாம் வடமொழிப் பெயர்களே. முதல் மாதமாகிய **'சிங்கத்துக்குத்'** தமிழ் மாதம் ஆவணி. அதுமுதல் வரிசையாகக் கணக்கிட்டுக் கொள்ளவும். சில அசாதாரண சந்தர்ப்பங்களைத் தவிர்த்தால் தமிழ், மலையாளம் இரண்டிலும் தேதிகள் ஒன்றாகவே இருக்கும். சிங்கம் முதல் தேதியும், ஆவணி முதல் தேதியும் இவ்வாண்டு 1966 ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதியே வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

9. ஆதிவாசிகளின் பாடல்கள்

கிராமங்களிலும், காடுகளிலும் மலைகளிலும் வாழும் மக்கள் பல நாடோடிப் பாடல்களைப் பாடுகிறார்கள். மேலும் பல பழமொழிகளையும் சொல்லுகிறார்கள். அந்த நாடோடிப் பாடல்களையும், பழமொழிகளையும் கேட்ட பல நகரவாசிகள் 'எதையோ பைத்தியக்காரனைப் போல் பாடுகிறான், பேசுகிறான்' என்று உதாசீனம் செய்கின்றனர்.

மலைகளிலும், காடுகளிலும், கிராமங்களிலும் வாழ்பவர் பாடும் பாடல்களையும் சொல்லும் பழமொழிகளையும் வைத்துக்கொண்டு, பண்டைக்கால உண்மைச் சரித்திரங்களை ஓர் அளவுக்கு நாம் இன்று தெரிந்துகொள்ளலாம். அந்த நாடோடிப் பாடல்கள் எல்லா விரோதி அரசனையும் போர் வீரர்களின் வீரத்தையும் பற்றிய கும்மிப் பாடல்களாகவும், தெருக்கூத்துப் பாடல்களாகவும், பழமொழிகளாகவும் உள்ளன.

நம் நாட்டிலே நாட்டைப் பகைவருக்குக் காட்டிக் கொடுக்கும் வஞ்சக எண்ணமுடையவர்கள்—அவைகளை மொழி பெயர்த்து முகலாய அரசாங்கத்துக்கும், ஆங்கிலேய அரசாங்கத்துக்கும் அனுப்பினார்கள். உடனே அந்தந்த

அரசாங்கம் நாட்டை ஆண்ட காலத்தில் அவ்விதமான பாடல்களைப் பாடக்கூடாது, மீறிப் பாடுவது சட்ட விரோதமானது என்று கூறித் தடை செய்தது. அவ்விதமான ஓலைச் சுவடிகளையும், அந்தோ! தீக்கு இரையாக்கியது. ஆனால் கிராமத்துக் கிழவிகளையும், மலையில் வாழும் மங்கையர்களையும், காட்டில் வாழும் காடத்திகளையும் எந்தச் சட்டமும் ஒன்றும் செய்யவில்லை. அந்தப் புண்ணிய வதிகள் மூலம் வாழையடி வாழையாகப் பல மறைந்த சரித்திரங்களை இன்று நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

மேலும், மேலை நாட்டினர்கள் எழுதிய சரித்திரங்களை உண்மையானவை என்று இன்று சில பட்டம் பெற்ற மேதாவிகள் எடுத்துக்கொண்டு, தாங்களும் அவைகளை அப்படியே தங்கள் தாய்மொழியில் எழுதுகிறார்கள்.

''சரித்திரத்தை அப்படி எழுதினால்தான் நூல் விலையாகும். எனக்கும் பெயர் கிடைக்கும்; பட்டம் பதவிகள் கிடைக்கும். அப்பொழுதுதான் அந்த நூலும் அங்கீகாரமாகும்'' என்று சிலர் உண்மைச் சரித்திரங்கள் தெரிந்தும் வழி வழியாக அறையில் இருந்துகொண்டே பல நூல்களை வைத்துக்கொண்டு 'ஈ அடித்தான் காப்பி'போல் எழுதுவதைக் கண்டு வருந்துகிறேன். மேலும், சிலர் ஓர் ஊருக்குச் சென்று அங்கு நான்கு ஐந்து நாட்கள் தங்கிவிட்டு, பிறகு தங்கள் ஊருக்கு வந்து தாங்கள் கண்ட மிகச் சில விஷயங்களை வைத்துக்கொண்டு, மற்ற நூல்களைப் பழையபடி பார்த்து எழுத ஆரம்பித்து விடுகின்றனர். இதிலிருந்து, மற்ற சங்ககால நூல்களையோ, கல்வெட்டுக்களையோ, ஓலைச் சுவடிகளையோ ஆதாரம் கொடுக்கவேண்டாம் என்று நான் கூறுவதாகக் கொள்ளக் கூடாது.

கிராமவாசிகளும், காடர்களும் கூறும் செய்திகளையும் வைத்துக்கொண்டு உண்மையான சரித்திரத்தை எழுத நாம்

முயல வேண்டும் என்றுதான் கூறுகிறேன். நாடோடிப் பாடல்களும், பழமொழிகளும் ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு, மலைக்கு மலை, மொழிக்கு மொழி வித்தியாசப் பட்டாலும் அவைகளை அலசி ஆராய்ந்து பார்க்கும்பொழுது ஒற்றுமையான பல செய்திகள் தெரிய வருகின்றன. அங்ஙனம் நான் பல இன மக்களிடமிருந்து சேகரித்த நாடோடிப் பாடல்களும் பழமொழிகளும் பல. அவற்றுள் கேரள நாட்டு ஆதிவாசிகளிடமிருந்து சேகரித்தவை இவைகள்: ''கேரள நாட்டில் வழங்கப் பெறும் (இன்னும் அச்சில் வராத) நாடோடிப் பாடல்கள் பல இருக்கின்றன. அவைகளில் ஒன்றை அதன் கருத்துரையுடன் இங்கு எழுதுகிறேன்.

ஓணம் பாட்டு

''பூமரம் பூக்கணும், பூக்காய் சாயணம்
சாயுன்ன கொம் பொன்னு வீசிடேணம்,
குங்கும மாறும் குளிர்த்த சரீரங்ஙளும்
எந்தாயோ இத்ர மெலிஞ்ஞு போயி
பூச்சூடும் மன்ன னெ
காணோஞோ இத்ர வெலிஞ்ஞு போயி (பூம்)
வேனல் பிறக்குன்னு, வெள்ளம் சுருங்வுன்னு
பாடத்தெ சேறொக்கெ பொன்னா குன்னு
தட்டானே வருத்தேணம் பொன் தூக்கிக்
—கொடுக் கேணம்,

தாலி பரத்தேணம் நீலு வின்னு
தாலியும் கெட்டித் தறயோடெ போகும்போள்,
நாந்த்ராணி விளக்கின்றெ நாளம் போரா,
தாலியும் கெட்டித் தறயோடெ போகும்
—போள் (வேனல்)

பட்டுச் சரடற்று தாலி போயி
தாலிக்குத் தாலியும் இரட்டத் தாலியும் தரா,
போரெங்கி லென்றெ வளயும் தரா
வளையில் மணியுண்டு மதியாகும் பொன்னுண்டு
மாற்றில்லாத்தப் பொன்னெனிக் கெந்தினாணு.

(—வேனல்)

பீடிகை:

கேரள நாட்டில் மிக முக்கியமாகக் கொண்டாடப் படுவது 'ஓணம்' பண்டிகை. தமிழர்கள் வேலையின் நிமித்தம் வெளி ஊர்களில் இருந்தாலும், 'தீபாவளி' அன்று விடுமுறை எடுத்துக்கொண்டு, தம்தம் வீடுககளுக்குச் செல்லுகிறார் களே அதுபோல் 'ஓணம்' பண்டிகைகளிலும் சாதாரணமாய் மலையாளிகள் தங்கள் தங்களுடைய வீடுகளுக்குச் செல்வ துண்டு. உலகில் மலையாளிகள் இல்லாத இடமில்லை. அவர்கள் எங்கே, எந்த மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந் தாலும் இந்த 'ஓணம்' பண்டிகையை இரண்டு மூன்று வீட்டுக் காரர்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து கொண்டாடத் தவறுவ தில்லை. ஏழை டீக்கடைக்காரனாக இருந்தாலும் இதைக் கொண்டாடுகிறான்.

சுமார் கி. மு. 200—300 ஆண்டுகளுக்கு முன்மே இந்த ஓணம் பண்டிகை கொண்டாடப் பெற்றது என்பது மதுரைக் காஞ்சியிலிருந்து தெரிய வருகிறது. இந்தப் பண்டிகை ஆவணி (சிங்கமாதம்—இது மலையாள மாதம்) மாதத்தில் திருவோண நாளில் கொண்டாடப்படுகிறது. காட்டில் இருக்கும் ஆதிவாசிகள் காடுகளில் பூக்கும் பூக்களைக் கொண்டு, பெரிய பெரிய மரங்களைச் சுமார் பத்து நாட்கள் வரையில் எரியவிட்டு, இரவுக் காலங்களில் அதைச் சுற்றிச் சுற்றி நடனமாடிப் பாடிக் கொண்டாடுகிறார்கள்.

ஓணம் பண்டிகை பற்றிப் பட்டணங்களில் வாழும் மக்கள் ஒரு காரணமும், கிராமங்களில் வாழ்பவர் ஒரு காரணமும், காடு, மலைகளில் வாழ்பவர் மற்றொரு கதையும் கூறு கின்றனர். ஆனால் எல்லோரும் கர்ணபரம்பரைக் கதை ஒன்றையே கூறுகின்றனர்.

ஓணம் பாட்டுகள் எங்கே யார் வாயிலாகப் பாடப் பட்டாலும் அவற்றின் கருத்துக்கள் எல்லாம், 'மாபலி' அரசனைப் போற்றுவதாகவே இருக்கும். மற்றொன்று யார் எந்த கர்ணபரம்பரைக் கதையை நம்பினாலும், ஓணம் பண்டிகையை எல்லோரும் ஒரே மாதத்தில் ஒரே நாளில் தான் கொண்டாடுகிறார்கள். எந்த மலையாளிகள் எங்கே வாழ்ந்தாலும், அன்று நேந்திரங்காய் வறுவலும், சேனைக் கிழங்கில் செய்யப்பட்ட பல பதார்த்தங்களும் மிக முக்கிய மாகச் சேர்த்துக்கொள்ளுவர். ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு, மலைக்கு மலை, காட்டுக்குக் காடு பதார்த்தங்களின் சுவை வித்தியாசப்படலாம், பெயர்களும் வித்தியாசப்பட லாம், ஆனால் நேந்திரங்காயும், சேனைக்கிழங்கும் வித்தி யாசப்படுவதில்லை.

அன்று எல்லா நண்பர்களும் உறவினர்களும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் வந்து சந்திப்பதுண்டு.

முற்காலத்தில் கேரள நாட்டைச் செங்கோலோச்சி ஆண்ட 'மாபலி' என்னும் மன்னன் திரும்பவும் இத் திரு வோண நாளில் கேரள நாட்டுக்கு வருகை தந்து தன் குடி மக்கள் நலமாகவே இருக்கிறார்களா? என்று பார்த்துவிட்டுப் போகும் நாள் இது என்று நம்பப்படுகிறது. அந்த நாளில் யாவரும் புத்தாடை உடுத்தி ஆடிப்பாடி மகிழ்வர். அப் பொழுது பாடப்படும் ஒரு பாடலே இவ்விடம் தரப்பட் டுள்ளது. நாட்டுப் பாடலாகையாலும் முன்னர் எழுத்

துருவம் பெறாததாகையாலும் வாழையடி வாழையாகக் காடுகளில் பாடப்பட்டு வருவதாலும் ஒரு சில இடங்களில் சொல் மயக்கமும், பொருள் மயக்கமும் ஏற்படலாம். அவர்கள் ஆடிக்கொண்டே பாடியபொழுது எழுதியது இது. ஆகையால் அவற்றைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால், இன்று கேரள அரசாங்கம் இந்தத் திருவிழாவைத் தேசியத் திருவிழாவாக்கிவிட்டது.

ஓணம் பாட்டுக்குப் பொருள்:

''பூமரங்கள் யாவும் பூத்துக் குலுங்க வேண்டும். அம்மரக் கிளைகளில் பூக்கும் மலர்களெல்லாம் முற்றிக் காய்களாக மாறி, கிளைகள் அக்காய்களின் பளு தாங்கமாட்டாது கீழே தலை சாய்த்து நிற்க வேண்டும் அந்தக் கிளைகளை மென் காற்று மெல்ல அசைக்க வேண்டும். (''சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கு'' என்ற தமிழ் இலக்கிய உவமை போல) இவ்வளவு வளமிக்க நிலத்தில் வாழ்ந்தும் (தலைவியின்) குங்கும நிறம்கொண்ட எடுப்பான மார்பகமும் குளிர்ச்சி பொருந்திய உடலும், ஏன் மெலிந்துவிட்டன? தனக்கு மலர் சூடும் மன்னவனைக் காணாமல் தான் மெலிந்தாளோ? வேனிற்காலம் பிறக்கிறது. நீர் நிலைகளில் தண்ணீர் குறைகிறது. நெல் வயல்களில் கிடந்த சேறு வறட்சியுற நெற்கதிர்கள் முற்றிக் கொய்தெடுத்த பின் மீந்து நின்ற வைக்கோல் வேர்க் கற்றைகள் பொன்னிறமாகக் காட்சி தருகின்றன. ஆகையால் பொற்கொல்லனை வரவழைத்துப் பொன் தூக்கிக் கொடுக்கவேண்டும். 'நீறு' என்ற நங்கைக்குப் பொற்றாலி செய்ய வேண்டும். அந்தத் தாலியைக் கட்டி, அவள் ஊருக்குள் நடந்து செல்லும்போது,

அப் பொற்றாலியின் ஒளியில் அருகே எரிந்துகொண்டிருந்த குத்துவிளக்கின் ஒளி குறைவாகத் தெரிகிறது. மற்றவர் கண் பட்டதாலோ என்னவோ அவள் தாலியின் பட்டுச் சரடு அற்றுக் கீழே விழுந்துவிட்டது. (அதனால் தலைவி வருத்த முறத் தோழி சொல்லுகிறாள்)

தலைவி! நீ வருந்த வேண்டாம். விழுந்துவிட்ட தாலிக்குப் பதில் இரட்டைத் தாலியாக வேறு தருகிறேன். போதாவிட்டால் எனது பொன் வளையலும் தருகிறேன். என் வளையல்களில் அருமையான மணிகளும் மிகுந்த பொன்னும் இருக்கின்றன. (அதற்குத் தலைவியின் பதில்)

மாற்றில்லாத அப் பொன் எனக்கு எதற்கு?

10. கேரள நாடோடிப் பாடல்

கேரளத்தில், கொல்லம் ஆண்டு தொடங்கிய காலத்தில் (கி.பி. 825ல்) பாண்டிய நாட்டைச் சேர்ந்த பெருமாள் மன்னனின் ஆட்சி முடிவடைந்தது. அந்த மன்னர் மரபினரின் ஆட்சிக் காலத்தில் தமிழ் இலக்கியம் கேரளத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்றது. பத்தாம் நூற்றாண்டு வரையிலும் மலையாள மொழியில் சில நாடோடிப் பாடல்களைத் தவிர, வகையான இலக்கியம் எதுவும் இருந்ததில்லை. **''தெக்கன் பாட்டுக்கள்''** என்னும் பிரபல நாடோடி இலக்கியத்தில் தமிழும் மலையாளமும் இணைந்திருக்கும் ஓரின இயல்பு நன்கு புலப்படுகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், அந்தப் பாடல் தொகுதியில் அடங்கியிருக்கின்றன. அது விவரிக்கும் ஒரு நிகழ்ச்சி: **''கன்னடியன் போர்!''** ''வடுக நாட்டு அரசனான கன்னடியனின் மகள், கேரளத்தின் குறுநில மன்னன் குலசேகரனைக் காதலித்தாள். பாண்டிய நாட்டவனான குலசேகரனையே மணவாளனாகப் பெற ஏங்கியிருந்தாள். புதல்வியின் காதல் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கத் தந்தை முனைந்தார். ஆனால், குலசேகரன் அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டான். கடைசியில் இரு மன்னருக்கும் போர் மூண்டது. திருவிதாங்கூர் அரசரின்

படை உதவி கிடைத்தும் குலசேகரன் தோல்வியை அடைந்தான். குலசேகரன், கன்னடியரிடம் சிறைப்பட்டான். ஆனால் அவனை வடுக நாட்டுக்குக் கொண்டு வரும்போது, நடுவழியிலேயே குலசேகரன் தற்கொலை செய்துகொண்டு மாண்டான். கன்னடியனின் மகள் காதலனின் சடலத்துடன் உடன்கட்டை ஏறிவிட்டாள்.'' தன்மானமும் தூய காதலும் கூடி வாழமுடியாமல் போன இந்தச் சோகக் கதை, அந்த நாட்டு மக்களின் உளள்த்தில் அழியா இடம் பெற்றுவிட்டது.

இந்த நிகழ்ச்சியின் உருக்கத்தைக் [கீழே காணும் "தெக்கன் பாட்டுப்" புலப்படுத்துகிறது.

"மன்னவனார் வடிவதெல்லாம்
வய்யகத்தி லெங்கும் காட்டிக்
கன்னடியன் சீமயிலே
கன்னி நல்லாள் வீத்திருக்கும்
பொன்னு மணி மேடயிலே
போய்ப் புகுந்தார் பாடவென்று
சென்று நின்று பாடிடவே
தேன் மயிலும் மொழி வடவார்
மண்டிச் கென்று பூங்குழலாள்
மங்கயவள் பார்த்திருந்தாள்
பார்த்திருந்த வேளயிலே
பாண்டி மன்னரைவரிலும்
அந்த மன்னன் வடிவைக் கேட்ட
சங்கி மெத்தத்தி சங்கிவிட்டாள்''

என்று ஸாஹித்திய சரித்திரம் என்ற (மலையாள நூல்) நூலில் திரு கே. எம் ஜார்ஜ் அவர்கள் எழுதியுள்ளார். காணாத உண்மைக் காதல் இந்தியாவில் கி. பி. 9ம் நூற்றாண்டிலேயே இருந்ததைக் கண்டு புகழ்வதா? புலம்புவதா?

11. ஆதிவாசிகளின் பழமொழிகள்

மலைகளிலும் காடுகளிலும் வாழும் ஆதிவாசிகள் சொல்லும் பழமொழிகளைக் கொண்டு பண்டைக்கால உண்மை வரலாறுகளை ஒரளவுக்கு அறிந்துகொள்ளலாம். அந்தப் பழமொழிகள் பெரும்பாலும் பகை மன்னர்கள், போர் வீரர்களின் வீரத்தைப் பற்றிய பழமொழிகளாக வழங்கப்படுகின்றன.

நாடோடிப் பழமொழிகள் ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு, வேறுபட்டிருந்தாலும் அவற்றை அலசி ஆராய்ந்து துருவித்துருவிப் பார்க்கும்பொழுது ஒற்றுமையான பல செய்திகள் அவற்றிலிருந்து தெரிய வருகின்றன. அத்தகைய பழமொழிகளுள் கேரள நாட்டு பழங்குடி மக்களிடமிருந்து திரட்டியவை குறிப்பிடத்தக்கவை.

அவற்றில் சில அடியிற் தரப்பட்டிருப்பதுடன், அதற்கு தமிழ் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள்:—

''மின்னுன்ன தெல்லாம் பொன்னல்ல''

தமிழ்: ''மின்னுவதெல்லாம் பொன் அல்ல''

விளக்கம்: ''உற்றோர் எல்லாம் உறவினர்களும் அல்லர். பெற்றவை எல்லாம் பிள்ளைகளும் அல்லர்''

''பூச்சய்க் கெந்து பொன் உருக்குன்ன எடத்து கார்யம்''

தமிழ்: ''பூனைக்குப் பொன் உருக்கிற இடத்தில் என்ன வேலை''

''வேலி தன்னே விளதின்னகத''

தமிழ்: ''வேலியே பயிரை மேய்ந்த கதை''

''அரமன ரகசியம் அங்காடி பரஸ்ஸியம்''

தமிழ்: ''அரண்மனையில் இரகசியமாக இருப்பவை சந்தியில் வெளிச்சமாக இருக்கும்''

''எலி பிடிக்கும் பூச்ச கலவு முடய்க்கும்''

தமிழ்: ''எலியைப் பிடிக்கிற பூனை சட்டியையும் உடைக்கும்''

''எல்லு முறியே பணி எடுத்தால் பல்லுமுறியே தின்னாம்''

தமிழ்: ''எலும்பொடியும் அளவு வேலை செய்தால், பல்லுடையும் அளவுக்குச் சாப்பிடலாம்''

''நாய்க் கோலம் கெட்டியால் குரய்க்கணும்''

தமிழ்: நாய் கோலம் (வேஷம்) போட்டால் குரைக்கத் தான் வேண்டும்''

''பையத் திந்நால் பனயும் திந்நாம்''

தமிழ்: ''மெல்லத் தின்றால் பனையையும் தின்னலாம்''

''மூத்தவர் சொல்லும் முது நெல்லிக்காயும் முன்மே கைக்கும் பின்னே மதுரிக்கும்''

தமிழ்: ''மூத்தோர் சொல்லும், முதிர்ந்த நெல்லிக் காயும் முதலில் கசக்கும், பின்பு இனிக்கும்.''

''அப்பம் தின்னணோ குழி யெண்ணணோ?''

தமிழ்: அப்பம் தின்ன வேணுமா? அதிலிருக்கும் குழி களை எண்ணிக்கொண்டிருக்க வேணுமா?''

''வேணேல் சக்க வேரிலும் காய்க்கும்''

தமிழ்: ''வேண்டுமானால் பலா வேரிலும் காய்க்கும்''

''இரயிட்டால மீன் பிடிக்காவூ''

தமிழ்: இரை போட்டால்தானே மீன் பிடிக்க முடியும்''

''வேண்டாத மருமகள் தொட்ட தொக் கைக் குற்றம்''

தமிழ்: ''ஆகாத மருமகள் தொடுவதெல்லாம் குற்றம்''

''ஆனயில்லா தெ ஆறாட்டோ''

தமிழ்: ''யானை இல்லாமல் ''ஆறாட்டுத்'' திருவிழாவா?''

''உண்ணிலே கண்டால் அறியாம் ஊரிலே பஞ்சம்''

விளக்கம்: ''குழந்தையைப் பார்த்தால் தெரியும் ஊரிலே பஞ்சம்''

தமிழ்: (A) ''நூலைப் போல சேலை, தாயைப்போல் பிள்ளை''

(B) ''மன்னன் எவ்வழியோ மன்னுயிர் அவ்வழியே!''

''சம்பத்து காலத்து தைபத்து வச்சால், ஆபத்து காலத்து கா பத்து எடுக்காம்''

தமிழ்: நல்ல நிலையிலிருக்கும்போது பத்துக் கன்று நட்டால் ஆபத்துக் காலத்தில் பத்துக் காய் பறிக்கலாம்.''

''கண்டத் தடிக்கு முண்டத்தடி''

தமிழ்: ''ஏட்டிக்குப் போட்டி, யானைக்குப் பானை சரி.''

"ஆன போகுன்ன வழியே வாலும்"

தமிழ்: "யானை போகிற வழியே தானே வாலும் போகும்?"

"அரியும் தின்னு ஆசாரிச்சியேயும் கடிச்சு, பின்னேயும் நாய் மெக்கட்டு"

தமிழ்: "அரிசியையும் தின்று, ஆசாரிப் பெண்ணையும் கடித்த பிறகும் நாய் விடுவதாக இல்லை"

விளக்கம்: "அவனுடைய சொத்தையும் மோசம் செய்து, அவனுடைய குடியையும் கெடுத்துக் கடைசியில் அவனுடைய உயிருக்கும் உலை வைத்துவிட்டான்" என்று தமிழில் சிலரது தீய செயலைப்பற்றி விவரிப்பர்"

"ஒரு கண்ணில் வெண்ண, (வெண்ணெய்) ஒரு கண்ணில் சுண்ணாம்பு"

விளக்கம்: "எதையும், எவரையும் சரிசமானமாக நடத்த வேண்டும் ஒருவரை ஒரு மாதிரியாகவும், மற்றொரு வரை மற்றொரு மாதிரியாகவும் நடத்தக்கூடாது.

"குதிரக்கு கொம்பு கொடுத்தால் ஒருத்தனேயும் வச் சேய்க்குயில்ல"

தமிழ்: "குதிரைக்குக் கொம்பு கொடுத்தால் (முளைத் தால்) ஒருவரையும் முட்டாமல் விட்டு வைக்காது.

"எலிக்கு ப்ராண வேதன, பூச்சக்கு வீண வாயன."

தமிழ்: "பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்"

விளக்கம்: "ஒருவரை மற்றொருவரிடம் காட்டிக் கொடுத்து, அவர்கள் திண்டாடுவதைக் கண்டு கொண் டாட்டம் போடுவதும் இக்காலத்தில் மனித சமூகத்தில் இருக்கிறது"

"அக்கர நில்க்கூம் போள், இக்கர பச்ச; இக்கர நில்க்கூம் போள் அக்கர பச்ச"

தமிழ்: "அக்கரையில் நின்று பார்க்கிறபோது, இக்கரை பச்சையாகத் தோன்றும்; இக்கரையில் வந்து பார்க்கிறபோது அக்கரை பச்சையாகத் தோன்றும்"

"முற்றத்து முல்லைக்கு மணமில்லை"

தமிழ்: நம்முடைய முற்றத்து முல்லைப்பூக்கு மணமில்லை"

"ஏட்டிலே பசு புல்லு தின்னில்ல"

தமிழ்: "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பதாம்.

"தற்காலத்தில் அனுபவமில்லாதவர்கள் செய்யும் பணியால் எவ்வளவோ ஆபத்துக்கள் உண்டாகின்றன" என்பதாம்.

விளக்கம்: "ஏட்டிலே பசு புல் தின்னாது."
"படத்தில் இருக்கும் பசு புல்லைத் தின்னாது"

"அர்த்தம் தான், அர்த்தம் தைவம்"

தமிழ்: "பாதி முயற்சி நாம் செய்தால், மீதிக்குத் தெய்வம் துணை புரியும்."

"பூச்ச கண்ணு மூடியால் லோக மொக்க இருட்டாணென்ன விசாரம்"

தமிழ்: "பூனை கண் மூடியால், உலகமெல்லாம் இருட்டென்று நினைப்பு"

விளக்கம்: "தான் செய்யும் குற்றங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது" என்று நினைத்துக்கொள்வார்கள்—சிலர்.

''பக்ஷியெ பிடிக்கான் மரம் முறிக்கும் போலெ''

தமிழ்: ''பறவையைப் பிடிக்க மரத்தையே முறித்துப் போட்டது போல.''

''பூச்சைக்கு மணி கெட் டேண்டா''

தமிழ்: ''பூனைக்கு மணி கட்ட வேண்டாம்''

''பூனைக்கு மணி கட்டுவது யார்?''

விளக்கம்: ''இப்படிச் செய்! அப்படிச் செய்'' என்று வாயால் சொல்லுவார்கள்—செய்கையில் ஒன்றுமிராது.''

''பாலம் கடக்குவோளம் நாராயணா—நாராயணா; பாலம் கடந்தால் கூராயணா.''

தமிழ்: ''பாலம் கடப்பது வரை—

'நாராயணா—நாராயணா; பாலம் கடந்த பின் கூராயணா.''

''காரியம் ஆவது வரை கழுதையானாலும் காலைப் பிடி.''

''கய்யில் புண்ணினு கண்ணாடி வேணோ?''

தமிழ்: ''கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேணுமா?

''சங்ஙாதி நன்னாயால், கண்ணாடி வேண்ட''

தமிழ்: ''நண்பன் நல்லவனாக இருந்தால் கண்ணாடி எதற்கு?''

''ஒரு மயுண்டெங்கில் உலக்க மேல் கிடக்காம்''

தமிழ்: ''ஒற்றுமையாயிருந்தால் உலக்கை மேலும் படுக்கலாம்''

''உள்ளது பரஞ்ஞால் உறியும் சிரிக்கும்''

தமிழ்: ''உள்ளதைச் சொன்னால் உறியும் சிரிக்கும்''

''காச்சிய பாலில் வீன்ன பூச்ச, தணுத்த வெள்ளம் கண்டால் ஓடும்!''

தமிழ்: ''காய்ச்சின பாலில் சூடுபட்ட பூனை, குளிர்ந்த தண்ணீரைக் கண்டாலும் பயந்து ஓடும்''

''ஸூக்ஷமம் இல்லாத்தவண்டே முதலு நாணமில்லாதவன் தின்னுன்னு''

தமிழ்: ''கவனமில்லாதவனின் சொத்தை, நாணயமோ, நாணமோ ஏதும் இல்லாதவன் தின்னுகிறான்''

''அம்பலம் விழுங்கிக்கு வாதில் பலக பப்படம்''

தமிழ்: ''கோயிலை விழுங்கியவனுக்குக் கதவுப் பலகை அப்பளம்.''

''மலை விழுங்கி மகாதேவனுக்கு கதவு ஓர் அப்பளம்.''

''ஒரு கல்லில் ரண்டு மாங்கா''

தமிழ்: ''ஒரு கல்லில் இரண்டு மாங்காய்''

விளக்கம்: ''எப்பொழுதும் தனக்கும், பிறருக்கும் நன்மை தரும் காரியத்தையே செய்ய வேண்டும்''

''காப்பணத்தின்டே பூச்சய்க்கு முக்கால் பணத்தின்டே பால்''

தமிழ்: கால் பணம் பூனைக்கு முக்கால் பணம் பால்''

''அப்பம் தின்னணோ? குழி எண்ணணோ?''

தமிழ்: அப்பம் தின்ன வேண்டுமா? குழி எண்ண வேண்டுமா?''

விளக்கம்: ''அப்பம் தின்னுவதற்குப் பதில் அப்பக் குழிகள் எத்தனை இருக்கிறது? என்று கேட்டானாம். குழி நான்கு இருந்தாலும், நீ சாப்பிட வேண்டிய பத்து அப்பத்

தைச் சுட்டுத் தின்னலாம் அல்லவா? அதைப்போலவே நமக்குக் காரியம்தான் பெரியதே தவிர, வீரியம் பெரியது அல்ல என்பதாம்.''

"விதச்சது கொய்யும்''

தமிழ்: ''விதைத்ததற்குத்தான் அறுவடை செய்ய முடியும்''

''எருமயின்றெ சுவட்லிருந்து வீணை வாயிச்சது போலே''

தமிழ்: எருமை மாட்டின் முன்னால் நின்றுகொண்டு வீணை வாசித்ததுபோல்.

விளக்கம்: ''முட்டாளுக்கு புத்தி சொல், கேட்பான். தலை கணம் உள்ளவனுக்கு சொல்லாதே.''

''நெய்யேறியால் அப்பம் கேடுவரில்லா.''

தமிழ்: ''நெய் அதிகமானால் அப்பம் கெடாது''

விளக்கம்: ''உடலுக்கு உரம் கொடுப்பது நல்ல நெய்'' நீண்ட ஆயுள் கொடுக்கும் என்பதாம்.''

''வரானுள்ளது வழியில் தங்கா''

தமிழ்: ''வர இருப்பது நடுவழியில் தங்கிவிடாது''

விளக்கம்: ''தாயே! என் நேரம் இன்னும் வரவில்லை'' என்றார் இயேசு.

''கொற்றிக்கு வெச்சது கொளக் கோழிக்கு''

தமிழ்: ''சுட்டது கொக்கை விழுந்தது குளக்கோழி'' (நீர்க்கோழி)

விளக்கம்: ''கொக்குக்கு வைத்த (துப்பாக்கி) ரவை குளக்கோழிக்குப் பட்டது.

"அடுத்து முயன்றாலும், ஆகும்
நாள் அன்றி, எடுத்த
காரியம் ஆகா, தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்
மரங்கள் எல்லாம் பருத்தால்
அன்றிப் பழா"

"நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று,
எல்லாம் ஆண்டவன் செயல்"

என்பதாம்.

"நாயுடெ வாலு பந்தீராண்டு காலம் குழலிலிட்டாலும் வளஞ்ஞே இரிக்கூ"

தமிழ்: "நாய் வாலை பன்னிரண்டு ஆண்டுகள் குழாயில் வைத்து வளைத்தாலும் அது வளைந்தே இருக்கும்."

"நாய் வாலை நிமிர்த்த முடியுமா?"

"அங்ஙாடியில் தோற்றால், அம்மயோடு"

"அங்காடித் தெருச் சண்டையில் தோற்றால் வீட்டில் அம்மாவிடம் சண்டையிட்டுத் தோல்வியைச் சரிக்கட்டி விடலாம்"

"அம்மாயி உடச்சது மண்சட்டி, மருமகள் உடச்சது பொன் சட்டி"

தமிழ்: "மாமியார் உடைத்தால் மண் பானை (கலயம்) மருமகள் உடைத்தால் பொன் கலயம்" (பானை)

"அரி நாழிக்கும் அடுப்பு மூன்னு வேணும்"

தமிழ்: ஆழாக்கு அரிசியானாலும், வேக அடுப்பு மூண்டுதானே ஆக வேண்டும்?"

''குறுணிப் பால் கறன்னாலும் கூரயத் தின்னுன்ன பசு ஆகா''

தமிழ்: ''குறுணிப் பால் (எட்டுப்படி பால்) கறந்தாலும், வீட்டுக் கூரையைத் தின்னும் பசு உதவாது''

''கார்த்திகை ஒழிஞால் மழயில்லஃ கர்ணன் பட்டால் படையில்ல''

தமிழ்: ''கார்த்திகை தவறினால் பிறகு மழை கிடையாது; கர்ணன் சாய்ந்தால் களத்தில் படை நிற்காது''

''ராமாயணம் முழுவன் வாய்ச்சிட்டும், ராமனு சீத ஆரென்னு சோதிக்குன்னு''

தமிழ்: ''ராமாயணம் முழுவதையும் வாசித்த பிறகும், சீதை ராமனுக்கு என்ன சொந்தம் என்று கேட்கிறான்''

''மகரத்தில் மழ பெய்தால் மலையாளம் முடியும்.''

''தை மாதத்தில் மழை பெய்துவிட்டால், மலையாள நாடே அழியவேண்டியதுதான்.''

''காக்கை குளிச்சால் கொக்கா இல்லா!''

''காக்கை குளித்தால் கொக்காகி விடாது''

''அடய்க்க கட்டவன் ஆனயும் கக்கும்''

தமிழ்: ''பாக்கு திருடியவன் யானையையும் திருடுவான்''

இப்படி எழுதிக்கொண்டே போகலாம். ஆயிரக்கணக்கான பழமொழிகளும், நாடோடிப் பாடல்களும் இருக்கின்றன. எல்லோரும் அவைகளைத் தேடி அலைந்து எடுத்தால் சரித்திரத்திற்குத் தொண்டு செய்யும் அன்பர்களாகலாம். மேலும் பழமொழிகள் தேவையா?

''உலகில் வழங்கும் பழமொழிகள்''என்ற என் நூலைக் காண்க:

12. பழைய ஊர்களும் பூகோளச் செய்திகளும்

திரு அனந்தபுரத்து, பத்மநாப சுவாமியின் தாசர்களாக இருந்து திருவிதாங்கோட்டு அரசர்கள், ஆண்ட திருவாங்கூர் சமஸ்தானத்தோடு 1949 ஜூலையில் கொச்சி சமஸ்தான மும், பின்னர் மலபார், காசர்கோடு பகுதிகளும் இணைந்து ''கேரள ராஜ்யம்'' ஆயிற்று. கேரள நாட்டில், ''கொடுங் கல்லூர்'' கி.பி. 800க்குப் பிறகே அப்பெயர் ஏற்பட்டது. அதற்குமுன், ''முசிறி'' என்றே பெயர். ஆனால் வெளி நாட்டார், ''முசிரிஸ்'' என்றே கூறுவார்கள். கிரேக்க அல்லது ரோமர் கப்பல்கள் கேரளத் துறைமுகங்களுக்கு வந்து போகும் என்றும், அக்காலத்தில், அக்கப்பல்களிலும், அத்துறைமுகங்களிலும் கேரள நாட்டு ஆதிவாசிகள் திறமை யாக கூலி வேலை செய்தார்கள் என்று பழந்தமிழ் நூல்களும் கேரள நூல்களும் கூறுகின்றன.

''யவனர்'' என்பது அராபியரையும், பாரசீகரையும் குறிக்கும்.

முசிறித் தெருக்களில் மக்கள் மீன் கொடுத்து நெல் வாங்கினராம். மிளகு மூட்டைகளைக் கடற்கரையில், ஏற்றுமதிக்காக வைத்திருப்பார்களாம்.

அக்காலத்தில் உண்டான பண்டமாற்று முறையையே இன்றும் காடுகளில் வாழும் எல்லா ஆதிவாசிகளும் கையாளுகின்றனர்—இதை இன்றும் நாம் நேரில் காணலாம்.

கேரள நாட்டின் தலைநகராக இருந்த, ''வஞ்சி'' கொடுங்கல்லூருக்கும்—திரு'வஞ்சி'க் குளத்திற்கும் அருகில் இருந்தது. வஞ்சியின் சிறப்பைப்பற்றிப் பல பாடல்கள் அன்று புலவர்கள் பாடினார்கள். ஆனால் அதையே இன்றும் பல கேரள ஆதிவாசிகள், ''நாடோடிப் பாடல்களாகப்'' பாடி நடனமாடுகின்றனர் என்று நினைக்கும்போது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

அக்காலங்களில் மேல்நாடுகளில் வாழ்ந்த பல அடிமைகளை ஆங்கிலேயர்கள் கப்பலில் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கும் தெரியாமல், அந்த அடிமைகள் கேரள காடுகளில் ஓடி மறைந்துகொண்டார்கள். அந்த அடிமைகள் தான். இன்று கேரளத்தில் பல காடுகளிலும், மலைகளிலும் சிதறுண்டு, ''பணியர்'' என்ற ஆதிவாசிகளாக வாழ்வதைக் காணலாம்.

13. வெளிநாட்டில் மலையாள நூலகங்கள்

மலையாளிகள் எந்த ஊர்களுக்குச் சென்றாலும் சரி, எந்த நாடுகளுக்குச் சென்றாலும் சரி ஒரு மலையாளி நண்பர், மற்றொரு மலையாளி நண்பரைச் சந்தித்தால், அவர்கள் ஆங்கிலத்திலோ, அல்லது அந்தந்த நாட்டு மொழியிலோ பேசுவதில்லை. உடனே அவர்கள் தங்கள் நாட்டுத் தாய் மொழியில்தான்—மலையாளத்தில் பேசுவார்கள். இதை நாம் நேரில் எங்கும் காணலாம். கேரள ஆதிவாசிகள்கூட, மலையாள மொழியில்தான் பேசுவதைக் கண்டேன்.

அதைப்போலவே, வெளிநாட்டில் வாழும் மலையாளிகள் அங்காங்கே நூல் நிலையங்களும், பத்திரிகைகளும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர்.

சிங்கப்பூரில் பத்து மலையாள நூல்நிலையங்கள் இருக்கின்றன. இவைகளை சாதாரண மலையாள நண்பர்கள் கூடி நடத்துகின்றனர். அதில் பல நல்ல நூல்களும், இருக்கின்றன. எல்லா மலையாளிகளும் ஒற்றுமையாக நடத்துவதைக் காணும்போது...?

ஆனால் தமிழ்நாட்டில், தமிழன் என்று கூறிக்கொண்டு, தமிழ் ஜனத்தொகைக்கு ஈடாக, எத்தனை நூல் நிலையங்கள் இருக்கின்றன? அதில் இருக்கும் நல்ல தமிழ் நூல்கள் தான் எத்தனை? எத்தனை நூல் நிலையங்கள் தமிழ் நாட்டில், ஆட்களே இல்லாததுபோல் மூடிக் கிடக்கின்றன? இக்குறைகளை நீக்க வேண்டிய வழிமுறைகளை செய்கையில் எடுத்துக் காட்டவேண்டியது அவசியமல்லவா? செய்வார்களா? இதற்கு மேல் எழுதமுடியாமல் கண்ணீர் என் விழிகளை நிறைத்தது...! நிற்க:

14. கேரள மாநிலம்

பிறந்தது: *1—11—1956.*

பரப்பளவு

39000 சதுர கிலோ மீட்டர்கள்: இந்தியாவின் மொத்த பரப்பளவில், *1.2* சதவிகிதம்.

இன்று மக்கள் தொகை

21,2,80,397 பேர், இந்தியாவின் மொத்த பரப்பளவில் *1.2* சதவிகிதம்.

21,12,80,397 பேர். இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் *3.9.* சதவிகிதம். இந்தியாவிலேயே ஜன நெருக்கம் அதிகமுள்ள மாநிலம் கேரளம்தான். ஒரு சதுர மைலுக்கு *548* பேர், மக்கள் அதிகமாக வசிக்கும் மாவட்டம் கொல்லம் (*24.06* லட்சம்) மக்கள் நெருக்கம் அதிகமான மாவட்டம் ஆலப்புழை (சதுரமைலுக்கு *1124* பேர்) இந்தியா வில் கிறிஸ்துவர்கள் அதிகமாக வசிக்கும் மாநிலமும் கேரளம் தான். (அந்தமானைத் தவிர) *21.22* சதவிகிதம் பேர் இருக்கிறார்கள்.

முக்கிய மாவட்டங்கள் நகரங்கள்

1. திருவனந்தபுரம்
2. கொல்லம்
3. ஆலப்புழை
4. கோட்டயம்
5. எர்ணாகுளம்
6. திருச்சூர்
7. பாலக்காடு
8. மாலப்புரம்
9. கோழிக்கோடு
10. கண்ணனூர்

பெரிய நகரங்கள் 88

1. மாநகராட்சிகள்—3
2. நகராட்சிகள்—27
3. கண்டோன் மெண்ட்—1
4. டவுன்ஷிப்—1
5 நகராட்சியில்லாத நகரங்கள்—56

விமான நிலையங்கள்

1. திருவனந்தபுரம்
2. கொச்சி

மலைகள்

1. 87—மலைகள் இருக்கின்றன.

2. மிக உயரமான மலை—ஆனமலை. இது 8841 அடி உயரம்.

நதிகள்

1. மொத்த நதிகள்—41

2. மிக நீளமான நதி—"பாரதப் புழை." இது 156 மைல்கள்.

3. நீளம் குறைந்த நதிகள்
   - A பூரப்புறப்பு.
   - B கலநாடு.

இவைகள் இரண்டும் 5மைல்கள்தான் இருக்கின்றன.

முக்கிய தொழில்கள்

முந்திரி, கயிறு, ரப்பர், மீன் பிடித்தல். மொத்த தொழிலாளிகளில் 50 சதவிகிதம் (ஒண்ணேகால் லட்சம்) முந்திரி தொழிலில் இருக்கிறார்கள்.

நான்கு லட்சம்பேர் கயிறு தொழிலில் இருக்கிறார்கள். 555 கயிறு தொழிற்சாலைகளும் இருக்கின்றன. 1.88 லட்சம் ஹெக்டேரியில் ரப்பர் விளைகிறது. இந்திய ரப்பர் உற்பத்தியில் இது 92.8 சதவிகிதம்.

முக்கிய சமூக இனப் பிரிவுகள்

1. நம்பூதிரிகள்
2. நாயர்கள்
3. ஈழவர்கள்
4. சிரியன் கிறிஸ்துவர்கள்
5. மாப்ளாக்கள்.

முக்கிய கலைகள்

1. கதகளி,
2. ஓட்டந் துள்ளல்.
3. மோகினியாட்டம்
4. கை கொட்டிக்களி.

முக்கிய பயிர்த் தொழில் உற்பத்தி

தேங்காய்; மிளகு; முந்திரி; பாக்கு; தேயிலை; ஏலக்காய்; ரப்பர்; தந்தச் சாமான்கள்; கொட்டாங்கச்சியில் கலைப்பொருள்கள்; தேக்கு; காப்பி; எபொனி; சந்தனம்; (பிளாக்வுட் கருப்பு—மரம்; ரோஸ் மரம்; ஓடுகள்.

புகழ் பெற்ற கேரள நாட்டுப் பெரியவர்கள்

1. ஸ்ரீநாராயண குரு

2. குருவாயூர் ஞானிகளான வில்வமங்கலம்

3. மேல்புத்தூர்—பூந்தானம்

4. எழுத்தச்சன்—கொட்டாரக்கரை தம்புரான், உண்ணாயி வாரியார்;

5. மகாகவி வள்ளத்தோல்—நாராயண மேனன்; குமாரன் பரமேஸ்வர ஐயர்.

6. ஓடக்குழல் சங்கர குருப்—தகழி சிவசங்கரபிள்ளை.

7. வைக்கம் மகமது பஷீர்.

8. சுவாதித் திருநாள்—ராஜா ரவிவர்மா

9. பாலக்காடு மணி, ரகு, செம்மங்குடி செம்பை—அம்பலப் புழை—சகோதரர்கள்—கே.பி.எஸ். மேனன், வி.கே. கிருஷ்ண மேனன், மன்னத் பத்மநாபன் முதலியவர்கள் மேலும் பலர் இருக்கின்றனர்.

அரசியல் குறிப்புகள்

1. கவர்னர்.........

2. முதல் அமைச்சர்.........

1948 முதல் கேரளத்தில் 8 முதலமைச்சர்கள்—12—தடவை மந்திரிசபை அமைத்திருக்கிறார்கள். முதல்முதன் அமைச்சராக இருந்தவர் பட்டம்தாணுப்பிள்ளை. இப்பொழுது முதலமைச்சராக இருப்பவர்...இந்தியாவிலேயே முதல் தடவையாகக் கம்யூனிஸ்ட் அமைச்சர் சபை அமைத்தது, கேரளத்தில்தான். அமைத்தவர்: ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாடு.

இயற்கை அழகும் மக்களின் சிறப்புக்களும்

"டிரஷர் லாண்ட் ஆப் தி ஈஸ்ட்" என்று மேலை நாட்டாரால் போற்றப்பட்ட மாநிலம் கேரளம். கல்வியில் முதன்மையாக நிற்கிறது. காஷ்மீரைப் போல் இயற்கையின் எழில் கொஞ்சும் நிலப்பரப்பு. ஆண்டு முழுவதும் மழை பெய்யும் இயற்கை சக்தியுடையது. யானைகள் கோவில் களில் இருக்கின்றன. தீவிர கம்யூனிசக் கண்ணோட்டமும் அதிகம். கோவில்களில் சுத்தமும் அமைதியும் பரவசப் படுத்தும் நிலையைக் காணலாம். எளிய மக்களாக வாழவும் விரும்புகின்றவர்கள். படித்தவர்களும், பட்டம் பெற்றவர் களும் இருந்தாலும், வேலையில்லாதவர்கள் அதிகமாக இருக்கின்றனர். எல்லா முக்கிய நகரங்களையும் இரயில் பாதை இணைக்கிறது. கேரளத்துப் பெண்மணிகளின் அழகும், காடுகளிலும், மலைகளிலும் வாழும் ஆதிவாசிகளின் அழகும் இலக்கியப் பெருமை உடையது.

கேரளத்து மக்கள் எங்கே வாழ்ந்தாலும், எந்த சீதோஷ்ணமாக இருந்தாலும் சரி இரண்டு வேளையும் குளிப்பார்கள். கேரளத்து மக்கள் எந்த ஊரில் வாழ்ந்தாலும் தூய வெள்ளை ஆடைகளையே அணிவார்கள்.

கேரளத்தின் மிக முக்கிய குறிப்புகள்

1. இந்தியாவிலேயே கொச்சியில் மட்டும்தான் யூதர் கள் தேவாலயம் இருக்கிறது.

2. இந்தியாவின் முதல் ராக்கெட் 'லாஞ்சிங்' ஸ்டேஷன் கேரளத்துத் தும்பாவில்தான் இருக்கிறது.

3. இப்போதைய திருவாங்கூர் மகாராஜா 'சித்திரைத் திருநாள்' அவர்கள் தன் சலுகைகளை ஒதுக்கிவிட்ட முதல் மகாராஜா.

4. முதன்முதலாக இந்திய அரசின் ''ஞானபீடம்'' விருது கிடைத்தது. கேரளத்தைச் சேர்ந்த திரு ஜீ சங்கர குருப் அவர்களுக்குத்தான்.

5. தென்னிந்தியாவில் முதலாவதாக ''தங்க மெடல்'' கிடைத்த சினிமா படம் ''செம்மீன்.'' சிறந்த நடிகைக்குள்ள ''ஊர்வசி விருது'' முதலாவதாகத் தென்னிந்தியாவில் ''துலாபாரம்'' என்ற மலையாளப் படத்தின் கதாநாயகியாக நடித்த திருமதி சாரதாவிற்குக் கிடைத்தது.

6. இந்தியாவிலுள்ள புல் தைலத்தின் (Lamon Grass oil) 99 சதவிகிதமும் கேரளத்தில்தான் உற்பத்தியாகிறது.

7. இந்தியாவில் முதலாவதாக ''கம்யூனிஸ்ட் ஆட்சி'' வந்தது கேரளத்தில்தான்.

8. தென்னிந்தியாவில் சக்தி வாய்ந்த ''டிரான்ஸ் மீட்டர்'' ஆலப்புழையில்தான் இருக்கிறது.

9. கேரளத்திலுள்ள, ''அறையும் நிரையும்'' என்ற வீடு கட்டும் அமைப்பு இந்தியாவில் வேறெங்கும் கிடையாது.

10. இந்தியாவில் கல்வியில் முதலில் நிற்பது கேரளம் தான்.

முக்கியப் பதவிகளில் கேரளப் பெண்கள்

1. திருமதி: கௌசல்யா— நாராயணன் மத்திய எக்ஸைஸ் சுங்க கலெக்டராகக் கொச்சியில் பதவி ஏற்றிருக்கிறார்.

2. குமாரி: பீ. கே. தெரசியா தலைமை என்ஜினீயர் பதவி ஏற்றிருக்கும் முதலாவது இந்தியப் பெண்மணி.

3. இந்திய நாட்டில் ஏற்கெனவே முதலாவதாக திருமதி: ''அன்னா சாண்டி'' 'என்ற கேரளப் பெண்மணி கேரளத்தில் உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பதவி ஏற்றிருக்கிறார்.

4. டாக்டர்: திருமதி பொன்னன் லூகோஸ் என்பவர் கேரளத்தில், ''வைத்திய சர்வீஸ்—இயக்குநராகப் பதவி யேற்றிருக்கிறார். இப்பதவி வகிக்கும் முதல் பெண்மணி இவர்தான்.

★

கன்னிமாரா பொது நூலகம் சென்னை-600 008.
165644
Y567:212
N87